294

15.2.57

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



2 அணா

செய்திகள்

டில்லி-சென்னை ஏர்-கண்டிஷன் ரெயில்

மொத்தம் 240 பேர் உட்காரலாம். ஓடும்போதே ஒரு முனையி லிருந்து மறு முனைக்குச் செல்லலாம். தூங்க வசதியுள்ள ஒரு கோச்சும் இணைந்தது. இப்படிப்பட்ட குளிர் சாதனம் ஏர்-கண்டிஷன் பொருத்திய ரெயில் சென்னையிலிருந்து டில்லிக்கு 10-ஆம் தேதி முதல் வாரத்துக்கு இரண்டு ரெயில்கள் விதம் ஓடுகின்றன.

நூற்றாண்டு விழா நினைவுக் கட்டடம்

சென்னைச் சர்வகலாசாலையின் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அப்போது சென்னைக்கு வந்திருந்த பிரதம மந்திரி நேரு, சர்வகலாசாலை நூற்றாண்டு விழா நினைவுக் கட்டடத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டினார்.

மோட்டார் டிரைவர் தகுதி

முதல் முதலாக ஒரு புதிய சாதனம் ஒன்று அமெரிக்காவிலிருந்து பம்பாய்க்கு வந்திருக்கிறது. ஸ்டாண்டர்டு எண்ணெய்க் கம்பெனியார் இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள். மோட்டாரை ஓட்டும் டிரைவர் தகுதியானவரா, கெட்டிக்காரரா என்று அந்தச் சாதனத்தினால் பரிசோதிக்க முடியுமாம். சூட்கேஸ் போலவே இருக்கிறது அந்தச் சாதனம். ஒரு டிரைவருக்கு இருக்க வேண்டிய 5 முக்கிய அம்சங்களை அது சோதிக்கிறதாம்.

பொறியியற் கல்லூரியில் விஞ்ஞான விநோதங்கள்

கிண்டி, பொறியியற் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து திறமையோடு அமைந்துள்ள கண்காட்சி எல்லா மாணவர்களும் மாணவியரும் அவசியம் காண வேண்டிய முறையில் உள்ளது. சங்கீதத்தின் மூலம் திறக்கும் அலிபாபா குகை, குழந்தை அழுதால் தானாகவே ஆடும் தொட்டில், எந்த மொழியில் கேள்வி கேட்டாலும் பதில் கொடுக்கும் யந்திர மனிதன், நம் உயரத்தைத் தானாகப் பதிவு செய்யும் விசை, அணு மின்சார நிலையத்தின் மாடல், தண்ணீருக்குள் எரியும் சுடர், நாட்டியமாடும் பொம்மை, தொடப்போனால் தண்ணீருக்குள் அமிழும் வாத்து, தானாகத் திறக்கும் கார் ஷெட்டு, பறக்கும் சாமியார், குரலினால் இயங்கும் மின்சார ரெயில், வயர் இல்லாமல் எரியும் பல்பு, மின்சார ஜோஸ்யர் ஆகியவை சிந்தனையையும் அறிவையும் கிளறும் அம்சங்கள்.

தசாம்ச நாணயச் செலாவணி

இப்போது புழக்கத்தில் உள்ள நாணயங்களைத் தசாம்ச நாணயங்களாக ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் எந்தக் கஜானாவிலும், ரிஸர்வ் பாங்குகளிலும் மாற்றிக்கொள்ளலாம். இப்போதுள்ள காலணா, அரையணா, ஓரணா, இரண்டணா நாணயங்கள் இன்னும் மூன்று வருஷ காலத்துக்குச் சட்டபூர்வமாகச் செலாவணியில் இருந்துவரும்.

பாதாளப் பாதை

சென்னை, சென்டிரல் ஸ்டேஷனுக்கும் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கும் இடையே பாதாளப் பாதை ஒன்றைக் கட்ட, சென்னைக் கார்ப்பரேஷன் உத்தேசித்துள்ளது. மவுண்டு ரோடில் இதே மாதிரி ஒரு பாதை கட்டும் திட்டம் சர்க்கார் ஆலோசனையில் இன்னும் இருந்து வருகிறது.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 8 இதழ்: 4

15 - 2 - '57

குழந்தைகளே! பக்கம் 2
தபால் பெட்டி .. 3
அந்தச் சிலை .. 5
யாரைக் கைது செய்வது? 11
பிறந்த நாள் பரிசு .. 13
டால்ஸ்டாய் கதை .. 18
தெய்வ தண்டனை .. 19
வேடிக்கைப் புதுமொழிகள்! 20
பட்டம்பெற்ற புளுகுமணி 23
எதிர்பாராத பரிசு .. 26
ரப்பர் ஸ்டாம்பு .. 28
சைனா சு - சூ! .. 29
கரும்பும் குறும்பும் .. 35
எழுத்தாளர் ஏமாற்றம் .. 36
கவியரங்கம் .. 37
நீங்களும் நானும் .. 38

அட்டைப் படம்:
N. ராமகிருஷ்ணா

செய்திகள் - 2-அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

பார் விளையாட்டு!



குழந்தைகளே!

இப்பொழுதெல்லாம் எனக்குக் கடிதங்கள் வந்து குவிந்த வண்ணமாக இருக்கின்றன. காரணம், ''நீங்களும் நானும்' என்ற பகுதிதான். கேள்வி கேட்பதில் ஆசையா, பெயர் வெளியாவதில் உள்ள ஆசையா என்று எனக்கே தெரியவில்லை. எப்படி இருந்தாலும் அந்தப் பகுதியின் மூலம் உங்களிடம் நேரிலே பேசுவது போன்ற இன்பம் எனக்கு உண்டாகிறது. உங்களுக்கும் அவ்விதமே இருக்கும் என்று எண்ணுகிறேன்.

சிலர் நான் பதில் கூற முடியாதபடி சில கேள்விகளைக் கேட்டு மடக்க வேண்டும் என்றே கேட்கிறார்கள். சிலருக்கு எதைக் கேட்பது என்றே தெரியவில்லை. இன்னும் சிலர் என் கேள்வி என்னவாயிற்று என்று மறுபடியும் கேட்கிறார்கள்.

என்ன கஷ்டமான கேள்வியாக இருந்தாலும் கூடுமானவரையில் நான் பதில் சொல்லிவிட முடியும். எப்படி என்றால் எனக்குத் தெரியாத விஷயமாக இருந்தால், அதைப் படித்தோ விசாரித்தோ தெரிந்துகொண்டு சொல்வது ஒரு பிரமாதமா? ஆனால் கேட்கக்கூடாத கேள்விகளுக்குப் பதில் சொல்வது முடியாதல்லவா? ஆகவே அப்படிப்பட்ட கேள்விகளைத் தயவு செய்து கேட்காதீர்கள். உங்கள் கேள்விக்குப் பதில் இரண்டு இதழ்களில் வராவிட்டால், வேறு கேள்வி எழுதியனுப்புங்கள். ஒரே இதழில் எல்லாருடைய கேள்விகளுக்கும் பதில் எப்படித் தரமுடியும்? நாலு பேர்கள் ஒரே விஷயத்தை எழுதினால் யாராவது ஒருவருடைய பெயர் தான் வெளிவரும். அதனால் உங்கள் பெயரைக் காணவில்லையே என்று வருத்தப்படாதீர்கள். உங்களுக்கு விடைதானே முக்கியம்? இன்னும் ஒரு கேள்வியைக் கேட்டு எழுதினால் உங்கள் பெயரும் வந்துவிட்டுப் போகிறது!

கண்ணனில் இப்பொழுது வெளிவரும் சைனு சு-கு என்ற தொடர் கதை மிகவும் விறுவிறுப்பாக இருப்பதாகப் பலர் எழுதி வருகிறார்கள். அப்படி விறுவிறுப்பாகச் செல்லும் கட்டத்திலேயே விரைவில் அது முடிந்துவிட இருப்பதை நினைவுபடுத்துகிறேன். இன்னும் இரண்டு அல்லது மூன்று இதழ்களில் அது நிறைவு பெறும். அதன் பிறகு அடுத்த பரிசுக் கதை வெளியாகும். சித்திரை முதல் புதிய சித்திரத் தொடர்கதை வெளியாக இருக்கிறது.

இதுவரை வெளியான தொடர் கதைகள், சித்திரக் கதைகள், இதுவரை வெளிவராத கதைகள் எல்லாம் கண்ணன் வெளியீடுகளாக, படங்களோடு அழகிய பதிப்பாக வெளிவந்துள்ளன. மிகவும் மலிவாக, எல்லோரும் வாங்கிப் படிக்கக்கூடிய விலையாக அவற்றிற்கு வைத்திருக்கிறோம். அதற்கெனத் தனி விலைப் பட்டியல் இருக்கிறது. கண்ணன் வெளியீடுகளை வாங்க விரும்புபவர்கள் விலைப்பட்டியல் கேட்டு எழுதலாம்.

இந்த வெளியீடுகள் எல்லாம் உங்கள் ஊர் கண்ணன் விற்பனையாளரிடமே கிடைக்கும். நீங்கள் அவரிடம் வாங்கிக்கொள்ளலாம். தபால் செலவு இதனால் மீதிப்படும். கண்ணன் சந்தாதாரர்கள், கண்ணன் கழக அங்கத்தினர்கள் தங்கள் எண்ணைக் குறிப்பிட்டு எங்களுக்கு எழுதினால் அவர்களுக்கு ரூபாய்க்கு இரண்டணா கமிஷன் உண்டு. அப்படியும் வாங்கிக் கொள்ளலாம். புத்தகத்தின் விலையை முன் பணமாக அனுப்புபவர்களுக்குத் தபால் செலவு கிடையாது. முன் பணத்தை ஒரு ரூபாய்க்குமேல் போனால் மணியார்டராகவும், ஒரு ரூபாய்க்குக் குறைவாக இருந்தால் தபால் தலையாகவும் அனுப்பலாம்.

சித்திரப் போட்டியைப் பற்றிச் சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தேன். அதை மறந்துவிடவில்லை. உங்களுக்குள்ள திறமையையெல்லாம் தூண்டிவிடுவதில்தானே என் நாட்டமெல்லாம்! ஆகவே விரைவில் அதைப் பற்றித் தெரியப்படுத்துகிறேன்.

—ஆசிரியர்.

என் பெயர்

என் பெயரின் முதல் எழுத்து திருச்சிராப்பள்ளியில் உள்ளது; திருநெல்வேலியில் இல்லை.

என் அடுத்த எழுத்து மாமரத்தில் உள்ளது; மாங்காயில் இல்லை.

மூன்றும் எழுத்து எலிக் குஞ்சிலும் உள்ளது; புலிக் குட்டிலும் உள்ளது.

நாலும் ஐந்தும் சங்கரனிடமும் உன்ளது; உங்களிடமும் உள்ளது.

என் கடைசி எழுந்து என் தம்பியிடம் உண்டு; தமையனிடம் இல்லை.

தயவு செய்து என் பெயரை விடுவித்துத் தாருங்கள்.

—நெடுமாறன், தஞ்சை.

(விடை: '[illegible]

ஒரு கடிதம்

தாங்கள் கண்ணனின் ஓர் இதழில் உறுப்பினர் பதிவுக் கூப்பனும் உறுப்பினர் விவரமும் வெளியிடுவதாகத்தான் திட்டினீர்களே தவிர, ஓராண்டுக் காலமாக வெளிவந்தபாடில்லை. நம் தமிழர்களை எண்ணித் தான் அமரகவு பாரதியார் 'வாய்ச் சொல்லில் வீரரடி' எனப் பாடினரோ, என்னவோ?

—தில்லை நெடுமாறன், நடராசபுரம்.

('கடிதம் எழுதுவதிலும் வீரரடி' என்று அவர் ஏன் தீட்ட வில்லையோ, தெரியவில்லை! ஆ.ர்.)

என் யோசனை

அன்புள்ள ஆசிரியருக்கு,

கண்ணன் இதழ்களில் இதுவரை வெளிவந்த அட்டைப் படங்களில் ஒன்றுவது கண்ணனில் வெளிவரும் தொடர் கதைகளுக்கு ஏற்றதாக இல்லை. கண்ணனின் அட்டைப் படம் உயிரற்ற உடலைப்போல் இருக்கிறது. அந்த உயிரற்ற உடலுக்கு உயிர் தருவன தொடர்கதைச் சம்பவங்கள். அதை அட்டைப் படமாக வெளியிடுங்கள்.

—வேந்தன்பட்டி சின்ன அண்ணுமலை.

(அந்த 'உயிரற்ற' உடலிலுள்ள உயிர் எங்கே போயிற்று என்று இப்போதுதான் புரிகிறது. உயிர் தர முன் வருகிறேன். ஆ-ர்)

ஏன்?

தங்களுக்கு நான் எத்தனையோ கதைகள் அனுப்பிவிட்டேன். ஆனல் அவற்றில் ஒன்றுகூடப் பிரசுரமாகவில்லையே. ஏன், ஏன், ஏன்?

—எஸ். கிருஷ்ணமூர்த்தி.

(நீ அனுப்பிய கதைகள் எல்லாவற்றையும் படித்துவிட்டேன். ஆனல் அவற்றில் ஒன்றுகூடக் கண்ணனுக்கு ஏற்றதாக இல்லை. ஆம், ஆம், ஆம்! ஆ-ர்)

பொழுது போக்கு

இது ஒரு ரகசிய விளையாட்டு. இந்த விளையாட்டிற்கு வேண்டியவை ஆறே ஆறு கட்டங்கள்தான். இவைகளை நீங்களே ஆறு அட்டைத் துண்டுகளை எடுத்து, கீழே கண்டதுபோல் கோடு போட்டு நம்பர்களையும் எழுதிக் கொள்ளலாம். பிறகு அந்த அட்டைத் துண்டுகளுக்கு 1, 2, 3, 4, 5, 6 என்று பெயரிட்டு விடுங்கள்.

1

5	3	11	9	7	13
15	21	17	23	19	25
1	27	33	29	35	31
41	45	39	43	37	47
51	57	53	49	55	59

2

6	12	7	13	5	14
15	22	30	31	23	28
4	29	36	30	31	37
44	39	46	47	45	38
53	60	54	55	52	13

3

12	9	11	10	13	14
25	24	15	26	27	28
8	31	30	29	40	41
45	43	44	46	47	42
59	56	58	57	60	13

4

3	7	6	11	10	14
18	15	22	19	23	26
2	34	27	30	35	31
43	46	39	44	42	38
51	55	50	54	59	58

5

19	17	20	21	18	22
27	24	25	26	23	28
16	49	30	31	48	29
55	50	52	53	51	54
31	56	60	57	58	59

6

34	37	35	36	33	38
39	42	40	43	41	44
32	45	48	46	49	47
51	54	52	55	53	50
57	60	58	46	59	56

இப்பொழுது உங்களுடைய நண்பன் ஒருவனைக் கூப்பிட்டு இந்த ஆறு அட்டைகளுள் உள்ள ஏதாவதோர் எண்ணை மனத்தில் நினைத்துக் கொள்ளச் சொல்லுங்கள். பிறகு அவர் எண்ணிய எண் எந்தெந்த அட்டைகளில் உள்ளதென்று கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். அவர் சொன்னதும் அந்த அட்டைகளின் நடுக்கட்டத்தில் இடது ஓரமாக இருக்கும் எண்களைக் கூட்டி அவர் நினைத்த எண்ணைச் சுலபமாகச் சொல்லி விடலாம். உதாரணமாக அவர் எண்ணியது 51 என்று வைத்துக்கொள்வோம். அந்த எண் 1, 4, 5, 6 முதலிய அட்டைகளில் உள்ளது. இந்த அட்டைகளின் நடுக்கட்டத்தில் இடது ஓரமாக உள்ள எண்களைக் கூட்டு.

அட்டை 1 - இல் = 1
அட்டை 4 - இல் = 2
அட்டை 5 - இல் = 16
அட்டை 6 - இல் = 32

நினைத்த எண் 51

—மு. ஸ்ரீராமன்.



3. மர்ம வார்த்தை

ஆச்சரியத்துக்கிடையே அந்தப் பாழும் மண்டபத்துக்கு அருகிலேயே 'மோட்டார் சைக்கிள்' வந்து நின்றது. அதை ஓர் ஒதுப்புறமாக நிறுத்திவிட்டு அதிலிருந்து இரண்டு பேர் இறங்கினர்கள். சுரேஷ், புதரின் பின்புறம் தன்னை நன்ருக மறைத்துக்கொண்டு வருபவர்களையே உன்னிப்பாகக் கவனித்தான்.

இருவருடைய முகங்களையும் மெல்லிய கறுப்புத் துணி மறைத்துக்கொண் டிருந்தது. மேனுட்டு உடை அணிந்த அவர்களை இனம் கண்டு பிடிக்கச் சுரேஷுக்கு வசதியில்லாமல் போய்விட்டது. இருவரும் ஏதோ மேனுட்டுப் பாஷையிலேயே பேசிக் கொண்டனர். அவர்கள் உச்சரிப்பிலிருந்தும் சில வார்த்தைகளிலிருந்தும், பேசுவது 'பிரெஞ்ச்' என்று தெரிந்துகொண்டான் சுரேஷ். அவர்கள் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும் போதும் சுரேஷின் உயிர் வெளியே சென்று மீண்டது.

இந்தச் சமயத்தில் ஒருவன் மண்டபத்தை நோக்கிச் சென்ருன். சுரேஷ் திகிலில் தத்தளிக்க ஆரம்பித்துவிட்டான். நோட்டம் பார்ப்பதற்கே அவன் செல்கிருன் என்பது சுரேஷுக்கு நன்கு புலப்பட்டுவிட்டது.

"நாம் இத்தனை நேரம் அங்கே உட்கார்ந்திருந்தோமே! காலடிச் சுவடு முதலியவை அவர்களுக்குச் சந்தேகத்தை அளித்துவிட்டால்?" மேலும் நினைக்கவே சுரேஷுக்குப் பயமாக இருந்தது.

மெதுவாகப் பதுங்கியவண்ணம் அவ்விடத்தைவிட்டுத் தப்பலாமா என்றுகூட எண்ணினுன். பிறகுதான் அதைவிட முட்டாள்தனம் வேறென்றுமில்லை என்ற உணர்வுக்கு வந்தான் சுரேஷ். 'நடப்பது நடக்கட்டும்' என்று அங்கேயே இன்னும் பதுங்கலாக அமர்ந்து மேலே நடப்பவைகளைக் கவனிக்க ஆரம்பித்தான்.

இருவரும் ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்தனர். அங்கே சிறிய காட்டுச் செடி ஒன்று வளர்ந்திருந்தது. 'குரோட்டன்ஸ்' வகைச் செடிதான் அது. அதை அடைந்ததும் இருவரும் அதைச் சுற்றி உட்கார்ந்துகொண்டனர்.

முதல்வன் மெதுவாக அதைச் சுற்றிப் பள்ளம் ஒன்று செய்து வேருடன் செடியைப் பிடுங்கினுன். பிறகு தன் கால் சட்டைப் பையில் கை விட்டு நீண்ட சுருள் கத்தி ஒன்றை எடுத்தான். அந்த இருட்டிலும் கத்தியின் வெண்மை பளபளத்துச் சுரேஷின் பீதியை அதிகப்படுத்தியது. பாம்புபோல் அதன் வளைந்த உருவம்....

அந்தக் கத்தியால் முதல்வன் சில அங்குல தூரம் பள்ளம் செய்தான். அதே சமயத்தில் இரண்டாமவன் தன்னிடமிருந்து நீண்ட 'டார்ச் லைட்' போன்ற ஒன்றை எடுத்தான். அதன் மேல்பாகம், குறிப்பாக நடு மத்திய பாகம் 'ப்ளு ஜாகர் வைரம்' ஒன்றை நினைப்பூட்டியது. 'ஸ்விட்'சை அமுக்கியபின் அந்த

இடத்தில் சற்றே பிரகாசமான வெளிச்சம் வளரத் தொடங்கியது. லைட்டின் ஒரு கோடியில் சிறு வளையம் ஒன்று சுழன்றுகொண்டிருப்பது நன்கு தெரிந்தது. எதிர்ப் பக்கம் கறுப்பாக மாறி வந்தது. அந்த ஆளின் கண்கள் சுழலும் வளையத்தின் மீதே இருந்தது. ஒரு குறிப்பிட்ட சமயத்தில் மற்றொரு ஸ்விட்சைப் போட்டான் அவன். வளையம் சுழல்வது நின்றது. வெளிச்சம் மேலும் வளராமல் நிரந்தரமாகியது. தான் தோண்டிய குழியினருகே கறுப்புப் பாகத்தைக் கொண்டு சென்றான் அவன்.

ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியமாக ஏதோ 'டக்'கென்ற சப்தம் கேட்டது. அவர்கள் 'டார்ச் லைட்'டை வெளியே எடுத்ததும் சுரேஷ் அதை நன்கு கவனித்தான். கறுப்புப் பாகத்தின்மேல் ஏதோ புதுப் பொருள்!

'நீ இருக்குமிடம் இருட்டானாலும், வெளிச்சம் உள்ள இடத்தில் நடப்பவை உனக்கு நன்றாகத் தெரியும்' என்ற ஒளித் தத்துவம் சுரேஷுக்கு உதவியது.

இந்தச் சமயம் வேறொரு நிகழ்ச்சி தொடங்கியது. ஆம்' . . .

அந்தக் குழியைச் சுற்றி பிரம்மாண்டமான பிளவு ஒன்று ஏற்பட்டது. அது தன் பரப்பை மெதுவாக அதிகரித்துக்கொண்டே வந்தது. ஒரு பக்கம், சுரேஷின் அருகிலுள்ள புதரைச் சமீபித்துவிட்டது. மேலே, பின்னால் நகரவும் முடியாமல், அங்கேயே உட்காரவும் முடியாமல் திணறினான் சுரேஷ். அவன் ரத்தம் உறைந்துவிட்டது.

நல்ல வேளையாகப் பிளவு அத்துடன் நின்றது. இரண்டு பேர்கள் தாராளமாக இறங்கலாம் என்ற அளவுக்குப் பள்ளத்தின் விஸ்தீரணம் இருந்தது. பூமியில் முதலாமவன் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு இறங்க, இரண்டாம் பேர்வழி அவனைத் தொடர்ந்தான். அவர்கள் நிதானமாக இறங்குவதைக் கவனிக்கக் கவனிக்கக் கீழே படி போன்ற அமைப்பு இருந்தாக வேண்டும் என்று ஊகித்தான் சுரேஷ். சில நிமிஷங்களில் பிளவுபழையபடி மூடிக்கொண்டது.

சுரேஷுக்குப் போன மூச்சுத் திரும்பியது! மெதுவாகத் தான் பதுங்கிய இடத்தைவிட்டு வெளி வந்தான் அவன்.

'நம் கண்ணெதிரே ஏதோ நடக்கிறது. அதில் நான் பங்கெடுத்துக் கொள்ள முடியுமா? நடக்கும் ஏற்பாடுகளைக் கண்டால் ஏதோ பயங்கரமான கூட்டத்தினருடையது என்று நிச்சயம் சொல்ல முடியும். நாம் ஏதாவது செய்யப் போய், முடிவு வேறு ஏதாவது ஆகிவிட்டால்..?'

தைரியத்தைக் கைவிடாமல் குறிப்பிட்ட குழியை நெருங்கினான் சுரேஷ். குழியை நெருங்கி என்ன செய்வது? அதை உற்றுப் பார்த்த வண்ணம் அங்கேயே உட்கார்ந்தான். அதில் நீண்ட பருமனான ஸ்க்ரூ ஆணி ஒன்று இருப்பது நன்கு தெரிந்தது. அதைச் சுற்றி எண்ணிறந்த சிறு வளையங்களும், சதுரங்களும் கொண்ட விசித்திர வேலைப்பாட்டுடன், இன்னதென்று கண்டுபிடிக்க முடியாதபடி 'பொறி' மயமாகவே இருந்தது.

சற்று நேரம் யோசித்தான் சுரேஷ். மனோதத்துவ மாணவன் அவன். தான் இந்தச் சமயத்தில் அந்தப் 'பொறி'யை எவ்வாறு உபயோகப் படுத்துவது என்ற ஆலோசனையில் ஆழ்ந்தான்.

'செய், முடிவு காண்' (ட்ரயல் அண்ட் எர்ரர் மெதட்) என்ற பாடம் அவன் நினைவுக்கு வந்தது.

'நல்ல பசியுள்ள குரங்கு ஒன்றைத் தந்திரமாகப் 'பொறி'யில் சிக்க வைத்து விட்டனர். பொறியோ, நன்கு தெரிந்த நிபுணரோ, அல்லது எஞ்சினீயரோதான் திறக்கும் படியான நிலைமை. பொறிக்கு அடுத்த பக்கம் குரங்கின் உணவு. இந்தச் சமயத்தில்தான், ஒரு மனோதத்துவ நிபுணர் கூறுகிறார். குரங்கு நெடுநேரம் முயற்சி செய்து பார்த்துவிட்டுப் பல முறை தோல்வியடைகிறது. ஆனால்..

'யாவரும் வியக்கும் வண்ணம் கடைசியில் பொறியைத் திறந்துவிட்டு உணவை அது நெருங்கிவிட்டது!'

இது நினைவுக்கு வந்ததும் ஒரு முறை சிரித்துக் கொண்டான் சுரேஷ். தான் அந்தக் குரங்கா? அதே 'கொள்கை'யை அனுசரிப்பது முடியாத காரியம்தான். ஆனாலும், அந்தப் பாடம் சற்று உதவியே புரிந்தது அவனுக்கு.

திடீரென்று ஒரு யோசனை உதித்தது அவனுக்கு. ஆம். சிறு வயதில் தந்திக் கம்பத்தின் அருகே காதை வைத்து, ஏதோ சப்தம் கேட்பதை விளையாட்டாகக் கருதியது அவன் நினைவுக்கு வந்தது. மறு நிமிஷம்....காரியங்களைத் தொடர்ந்து நடத்தலானான்.

கீழே இறங்கி யிருப்பவர்கள் நிச்சயம் சம்பாஷணையில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதில் ஏதாவது தனக்குப் புலப்படுகிறதா என்றறிய விரும்பினான் அவன். இரும்பு ஆணியின் நுனியில் வலது காதைப் பதித்தவண்ணம் காலை நீட்டிக் கொண்டு படுத்தான்.

உண்மையில் ஆரம்பத்தில் ஒரு பயனுமில்லை. தன் கவனத்தை ஒருங்கே அங்கே செலுத்திய பின் ஏதோ முடிவுக்கு வந்தான் சுரேஷ்.

ஆயிற்று. அவனது செயலிலும் பலன் இருக்கவே செய்தது.

ஆம்....பேச்சில் சில சில வார்த்தைகளைத் தாங்கி வரவே செய்தது, பாதாளம் வரை சென்றிருந்த அந்த நீண்ட ஆணி. நடந்த செயல்களிலிருந்து, 'மின்சாரத் தொடர்புண்டு அவ்விடத்திற்கு' என்று ஊகித்த சுரேஷுக்கு, அந்த ஆணி சௌகரியமாக ஒற்றன் வேலை செய்தது!

'பிரெஞ்ச்' பாஷையில் பேசிக் கொண்டாலும் இடையிடையே ஆங்கிலத்தையும் உபயோகித்துக் கொண்டிருந்தனர் அவர்கள். தெளிவாக ஒன்றும் புரியவில்லை.

சுரேஷின் கூர்மை அதிகமாகியது. கடைசியில்..

அவன் முகம் மலர்ந்தது! எழுந்திருந்தான். ஜிம்மியை அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

ஆம்..

"ஒரு வார்த்தையைச் சம்பாஷணையில் சில முறையோ அதற்கு மேலோ உபயோகித்தால் அதில் ஏதோ இப்போது மர்மம் இருக்கிறது" என்று சுரேஷ் அறிந்து கொண்டான். பிரெஞ்சோ, ஜெர்மனோ, ஆங்கிலமோ அந்த ஓர் 'அதிர்ஷ்டம்' (!) ஒரு வார்த்தைக்குக் கிடைத்து விட்டது.

"அடெ ஃபிஃப்டீன் த்ரைஸ்!"

கீழே சென்றிருந்தவர்கள் திரும்புவதற்குக் குறைந்தது பத்து நிமிஷங்களாவது செல்லும் என்று உணர்ந்தான் சுரேஷ். அதற்குள் அந்தக் காட்டுப் பிரதேசத்திலிருந்து தப்பிவிட வேண்டும்.

நல்ல வேளையாக—

அவன் அதிர்ஷ்டமும் சேர்ந்து கொண்டது.

மண்டபத்தின் ஒரு பக்கத்தில் ஒற்றையடிப் பாதை ஒன்று செல்வதைக் கண்டான் சுரேஷ்.

அவனது மனமோ, கரு மேகங்களால் சூழப்பட்டிருந்தது. எப்போது மழை பொழியுமோ என்று சொல்ல முடியாத நிலை.

சென்றுகொண்டே இருந்தவன் திடீரென்று தேள் கொட்டியவன் போல் திடுக்கிட்டுவிட்டான். மன்னிக்க முடியாத தவறு செய்துவிட்டவன் போல் தன் தலையில் ஓங்கிக் குட்டிக் கொண்டான்.

ஆம்; இவ்வளவு நேரம் ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துவிட்டானே!

தனது நோக்கமென்ன, தான் எப்படி இந்த இடத்திற்கு வந்தோம் என்ற கேள்விகளுக்கு 'ஆதி'யான நீச்சல் போட்டியைப் பற்றியும் தனக்காக ஜனங்கள் கவலைப் பட்டுக் கொண்டோ, அல்லது காத்துக் கொண்டோ இருப்பார்கள் என்பதைப் பற்றியும் அறவே மறந்துவிட்டானே!

தன்னைப் பலர் தேடிக்கொண்டிருப்பார்கள் என்ற நினைவு அவனை என்னவோ செய்தது.

ஒருவாறு ஆறுதலடைந்த அவன் முன்னேறவும், தூரத்தில் விளக்குகள் நடமாடுவது தெரிந்தது.

நெருங்க நெருங்க, ஆட்கள் அவனையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர் என்று அறிந்தான். காரணம் என்னவோ கூறிவிட்டு அவர்களுடன் படகிலேறினான்.

''பறங்கியன் காடுல்ல சாமி அது? அங்கே போனுல் காலெ வெட்டிடுவானுகளே! அந்தப் பீதியால்தான் உள்ளே வந்து நாங்க தேட முடியாமல் போய்விட்டது'' என்று படகோட்டி ஒருவன் சமாதானம் கூறவும், சுரேஷ் துணுக்குற்ருன்.

வந்திருந்த பிரமுகர்கள் திரும்பி விட்டனர் என்றும், பரிசளிப்பு விழாவை இன்னெரு நாளைக்கு நடத்தத் தீர்மானித்திருப்பதாகவும் அங்கிருந்தவர்களிட மிருந்து தெரிந்துகொண்டான் அவன்.

* * *

4. நம்பலாமா?

இருட்டி விட்டாலும், ஏராளமான பேர்கள் அவனுக்காகக் காத்திருக்கவே செய்தனர். படகைவிட்டு அவன் இறங்கியதும், தாவி அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டான் நண்பன் சேகர். ஓர் உண்மை நண்பன் என்ற முறையில் தன் மகிழ்ச்சியை எவ்வளவு தூரம் காட்ட முடியுமோ அவ்வளவையும் செய்தான் சேகர்.

பலர் முன்னேற்பாடாக வாங்கி வந்திருந்த மாலைகளையும் சுரேஷின் கழுத்தில் போட்டு அவனைத் திக்கு முக்காடச் செய்து விட்ட

னர், தங்களுக்கு இருந்த ஆர்வத்தில்.

யாவரிடமும் நன்றி தெரிவித்து விட்டு, சுரேஷ் வீடு செல்வதற்குள் 'போதும் போதும்' என்றாகி விட்டது.

* * *

அன்றாட அலுவல்களை முடித்துக் கொண்டு சுரேஷ் படுக்கைக்குச் சென்றான். தூக்கமும் வரவில்லை. அவன் அதை விரும்பவுமில்லை. யோசனை என்னும் பசிபிக் சமுத்திரத்தில் நீந்தத் தெரியாது தத்தளித்துக்கொண் டிருந்தான் அவன். தனது வாழ்வில் புது அத்தியாயம் ஆரம்பமாகி விட்டது என்பது மட்டும் நிதரிசனமாகத் தெரிந்தது அவனுக்கு. அதைச் சரிவரப் பயன் படுத்திக்கொள்ள முடியுமா என்பதுதான் அவனது சந்தேகம். தான் கண்ட காட்சிகள் அனைத்தும் உண்மைதானா?

சந்தேகப்படவே ஆரம்பித்து விட்டான் சுரேஷ். எத்தனையோ கதைகளில்தான் இந்தமாதிரிச் சம்பவங்களைக் கேட்டிருக்கிறோம். படித்திருக்கிறோம். ஆனால் நேருக்கு நேர் ஒன்றைச் சமாளிக்க வேண்டுமென்றால்—நேர்ந்து விட்டதென்றால் எளிதான காரியம்தானா?

மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான் சுரேஷ். பேசாமல் தான் கண்ட நிகழ்ச்சிகளைப் போலீஸில் தெரிவித்து விடலாமா என்றும் ஆலோசித்தான்.

பறங்கியன் தோட்டத்து ஆட்கள் வெள்ளையர்கள். 'எஞ்ஜினீயரிங் சயன்ஸ்' முதல் பல வகைகளிலும் நல்ல தேர்ச்சி பெற்றவர்கள். அவர்களைப் பற்றிப் போலீஸில்—அதுவும் உள்ளூர்ப் போலீஸில் தகவல் கொடுத்து விட்டால் அதைவிட வீண்

வேறொன்றுமில்லை. தடதட வென்று பத்துப் பேர்கள் தோட்டத்தில் போய் ஆராய்ச்சி செய்வார்கள். என்ன, கள்ளச் சாராய வேட்டையா இது? ஆனால் பலன் என்னவோ நிச்சயம் இல்லை. மற்றும் தன் உயிருக்கே அல்லவா ஆபத்து நேரிடும்? போலீஸார் சுரேஷின் தகவலை நம்பவேண்டுமே முதலில்!

சுரேஷ் அந்த யோசனையைக் கைவிட்டான் முடிவில்.

தனக்கே ஒருவிதத் திறமையுண்டு. அதை இவ்விஷயத்தில் நன்கு காட்டிவிட வேண்டும்.

தத்துவப் பேராசிரியர் ஒருவரது கூற்று அவனது நினைவுக்கு வந்தது.

'உலகில் ஆயிரத்திற்கு ஒருவன் கூடத் தனது திறமையில் அரைக்கால் பங்கையும் உபயோகிப்பதில்லை.'

யோசனையிலிருந்து விடுபட்ட சுரேஷ் தன் டயரியை எடுத்தான். பேனாவை எடுத்தான். இப்போதும் தயக்கம். ஒரு முறை யோசித்தான்.

கடைசியில் தன் காதில் விழுந்த அந்த மர்ம வார்த்தையை மட்டும் டயரியில் எழுதினான்.

பிறகு அதை மேஜையில் வைத்துப் பூட்டிவிட்டுப் படுக்கச் சென்றான்.

* * *

சுரேஷ் உளவு கொடுத்துவிட்டான் என்பது அந்த மனிதர்களுக்குத் தெரிந்து விட்டது. சுரேஷை அவர்கள் சாமர்த்தியமாக வசப்படுத்திவிடுகிறார்கள். பாழும் மண்டபத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். தற்போது மண்டபம் சாதாரண மண்டபமாக இல்லை. ஒரு காளி கோயிலாக இருக்கிறது. அதைச் சுற்றி ஏராளமான கபாலிகர்கள் கூட்டம். மண்டையோடுகளால் ஆன மாலைகளை அணிந்து கொண்டு, குடிவெறியில் விநோத சப்தங்களை ஏற்படுத்திக்கொண்டு நடனம் ஆடிக் கொண்டிருக்கின்றனர்.

சுரேஷ் அவர்களிடம் இழுத்துச் செல்லப்படுகிறான். கபாலிகர் தலைவன் அவனைக் கண்டு பற்களை நறநறவென்று கடிக்கிறான். எதிரே பலிபீடம். மகாகாளிக்குக் கற்பூரம் காட்டப்படுகிறது. பிறகு சுரேஷ் பலிபீடத்தில் கழுத்தை வைத்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறான்.

'ஐயோ' என்று அலறிய வண்ணம் சுரேஷ் விழித்துக்கொண்டு விட்டான். அவன் உடையெல்லாம் தெப்பமாக நனைந்து விட்டது. பதறியபடியே அவன் தந்தை ஓடி வந்தார். "ஒன்றுமில்லையப்பா, ஒரு பயங்கரக் கனவு" என்று தன்னைச் சமாளித்துக்கொள்ள முயன்றான் சுரேஷ். பிறகு எழுந்திருந்து மணியைப் பார்த்தான்.

மணி ஒன்று.

மறுபடியும் சற்று நேரம் படித்துவிட்டுப் பிறகே படுக்கச் சென்றான் அவன். அநேகமாக அன்றிரவு அவனுக்குத் தூக்கம் இல்லையென்றே சொல்லலாம்.

மறுதினம் காலையில் எழுந்ததும் தன் வேலைகளை முடித்துக்கொண்டு தன் அறைக்குச் சென்றான். முதல் நாளிரவுச் சம்பவங்களை யோசித்துப் பார்த்தான். தான் கண்ட கனவையும் எண்ணிப் பார்த்தான். எல்லாம் பயங்கரமாயிருந்ததேயொழிய ஒன்றும் புரியவில்லை அவனுக்கு.

யாரிடமும் எங்கும் சந்தேகம் ஏற்படத்தொடங்கியது அவனுக்கு. யாரை நம்புவது, யாரை நம்பக் கூடாது என்பதே அவனுக்குப் புரியவில்லை.

ஸி. ஐ. டி. உத்தியோகஸ்தர்களுக்குச் சந்தேகம் ஒரு வரப்பிரசாதம் என்பதை அவன் அறிவான். ஆனால் அந்தச் சந்தேகமே தனக்கு ஓர் எல்லையைத் தாண்டி இருக்கிறது என்பது அவனுக்குத் தெரியாது. தான் மேற்கொண்டிருக்கும் முயற்சியை— அதைப் பற்றிக்கூட இன்னும் அவன் முடிவுக்கு வரவில்லை—தனது உயிர் நண்பன் சேகரிடம் தெரிவிக்கலாமா என்பதே பெரும் பிரச்னையாக இருந்தது அவனுக்கு......சேகர் ஆருயிர்த் தோழன்தான்.

ஆனால்..அவனை எவ்வளவு தூரம் நம்பலாம் என்பதே அவனுக்குத் தகராறாக இருந்தது.

யாரைக் கைது செய்வது?

விண்மணி

மதுரை ரெயில்வே ஸ்டேஷனில் ஒரே கூட்டம். எள் போட்டால் எண்ணெயாகிவிடும் என்பார்களே, அவ்வளவு ஜனத்திரள்! அந்தக் கூட்டத்தில் பெரும்பாலானோர் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸை எதிர்நோக்கிக்கொண் டிருந்தனர்.

அந்தக் கூட்டத்தின் நடுவே ஒரு சாயபு கையில் தோல் பையுடன் இங்கும் அங்குமாக அலைந்து கொண்டிருந்தார். அவரது முகம் வேதனையால் பீடிக்கப்பட்டவரைப் போல் தோன்றிற்று. இதைக் கவனித்துக்கொண் டிருந்தது ஒரு கிழட்டு உருவம். இவர் கையிலும் ஒரு தோல்பை காட்சியளித்தது!

இவர் வேஷம்தான் கிழடே தவிர உண்மையில் இளம் ரத்தம்தான் இவர் உடலில் ஓடுகிறது. இவர் வேறு யாருமல்ல! திருடனைக் கண்டு பிடிக்கக் கிழட்டு வேஷம் போட்டிருக்கும் சி. ஐ. டி. செல்லதுரை இவர்தான்.

கிழட்டு வேஷமிட்டிருந்த செல்லதுரை சாயபுவைத் தொடர்ந்து தொடர்ந்து சென்றுகொண் டிருந்தார். பாவம்! செல்லதுரை ரெயில்வே ஸ்டேஷனிலேயே குறுக்கும் நெடுக்குமாகப் பல முறை அலைந்தார். திருடனைக் காணத் துப்பறிவது என்றால் லேசான காரியமா?

சென்னையை நோக்கிச் சென்ற திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் ஸ்டேஷனை அடைந்தது! சாயபு ஒரு பெட்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார். கிழட்டுச் செல்லதுரையும் அதே கேரேஜில் ஏறி, சாயபுக்கு எதிரே உட்கார்ந்து கொண்டார். உடனே சாயபு இறங்கி மற்றொரு பெட்டியில் ஏறிக் கொண்டார். செல்லதுரையும் இறங்க முயற்சித்தார். அதற்குள்



வண்டி புறப்பட்டு விட்டதால் அப்படியே அமர்ந்து கொண்டார். ஆனாலும் சாயபு கீழே இறங்குகிறானா இல்

ஒருவரையொருவர் முறைத்துப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தனர். சிறிது நேரத்தில் சப் இன்ஸ்பெக்டர் சாம்பசிவம் அங்கே வந்தார்.

''சார்! இவனைக் கைது செய்யுங்கள்! இவன்தான் சாயபு வேஷத்தில் திரியும் கொள்ளைக்கார கறுப்பன்!'' என்றார் செல்லதுரை.

''இல்லைங்க சார்! ஏமாத்தரான். இவனைக் கைது செய்யுங்கள்! இவன்தான் கிழட்டு வேஷத்தில் திரியும் பிக்பாக்கெட் பிருந்தாவனம்'' என்றார் சாயபு.

லையா என்பதைக் கவனித்துக் கொண்டே வந்தார்.

வண்டி திருச்சி ஸ்டேஷனை அடைந்தது. சாயபு இறங்கிச் சென்று கடையில் டீ சாப்பிட்டார். செல்லதுரையும் இறங்கி, சாயபுவைப் பின் தொடர்ந்தார்.

வண்டி புறப்பட்டது. சாயபு செல்லதுரையை முறைத்துப் பார்த்துவிட்டு ஓடிப்போய்ப் பெட்டியில் தொத்திக்கொண்டார். செல்லதுரையும் ஓடிப்போய் ஏறிக் கொண்டார்.

செல்லதுரையின் சந்தேகம் நிவர்த்தியாயிற்று. போலீஸையும், தன்னையும் கூட்டத்தையும் கண்டு பயந்து ஓடி, மிரள மிரள விழிக்கும் கொள்ளைக்காரக் கறுப்பன்தான் சாயபு வேஷத்தில் வந்துள்ளான் என்று ஊர்ஜிதப்படுத்திக்கொண்டார். கவனம் அதிகமாகியது! தூங்கவேயில்லை!

விடிந்துவிட்டது! வண்டி எழும்பூர் ஸ்டேஷனை அடைந்தது.

சாயபு இறங்கி அருகே உள்ள அறைக்குச் சென்று திரும்பி வந்தார். செல்லதுரையும் அதே அறைக்குச் சென்று வந்தார்.

சாயபுவும் கிழட்டு வேஷ செல்லதுரையும் ரெயில்வே ஸ்டேஷனில் ஒரே இடத்தில் மௌனமாக,

''என்னங்க சார், இது! ஒரே சமயத்தில் இரண்டு பேரும் என்னை டெலிபோனில் அழைத்தீர்கள்! இப்போது உங்களில் யாரைக் கைது செய்வது? உங்களில் சி. ஐ. டி. யார்?'' என்றார் ஆச்சரியத்தோடு சப் இன்ஸ்பெக்டர்.

''என்னங்க சார், இது! இன்னுமா சந்தேகம்? நான்தான் சி. ஐ. டி. செல்லதுரை. இவனை நான் மதுரையிலிருந்து தொடர்ந்து வருகிறேன். இவனைக் கைது செய்யுங்கள்!'' என்று கிழட்டு வேஷத்தைக் கலைத்தார் செல்லதுரை.

''ஆ! செல்லதுரை! அந்தத் திருட்டுப் பயல்கள் நம் வேஷத்தை ஒத்து இருந்ததால் நாமே ஏமாந்துட்டோமே! நான்தான் சி. ஐ. டி. சுப்பிரமணியம்! தூத்துக்குடியிலிருந்து வருகிறேன்'' என்று சாயபு வேஷத்தைக் கலைத்தார் சுப்பிரமணியம்.

''பேஷ்! பேஷ்! போதும், நீங்கள் துப்பறிந்த லட்சணம்! இதோ பாருங்கள், மேலதிகாரியின் உத்தரவு'' என்று சிரித்தவாறே ஒரு கடிதத்தைக் காண்பித்தார். அதில், இருவரும் துப்பறியும் இலாகாவில் இதுவரை திறமையாக நடந்து கொள்ளாததால் சாதாரண போலீசாக மாற்றப்பட்டிருந்தார்கள்.

பிறந்த நாள் பரிசு

'மாயவன்'

"ஏய், எங்கேடா போயிட்டு வர்றே?....''

''.......''

''பத்மா வீட்டுக்கா?''

''ஆமாம், அப்பா.''

''எவ்வளவு தரம் சொன்னாலும் ஏண்டா கேக்க மாட்டேங்கிறே? என் ஜன்ம விரோதி வீட்டுக்கு நீ போகலாமாடா? விரோதத்தினாலே பங்காளிக் காய்ச்சல்லே ஏதாவது செய்துட்டா என்னடா செய்றது? ஏண்டா உனக்குப் புத்தியே வர மாட்டேங்கிறது?''

''பெரியம்மா அப்படியெல்லாம் ஒண்ணும் செய்யமாட்டாங்க, அப்பா! என்னிடம் எவ்வளவு அன்பா - ஆசையா இருக்காங்க, தெரியுமா?''

''எல்லாம் வேஷம்டா.. உனக்கு என்னடா தெரியும்? சின்னப் பய!..இங்கே பாரு, இனிமே அந்த வர்சற்படிப் பக்கம் போனே காலை முறிச்சுடுவேன். தெரியுமா?''

''அப்பா, அடுத்த வாரம் பத்மாவுக்குப் பிறந்த நாளாம். அதுக்கு மட்டும் போயிட்டு வந்துடறேன், அப்பா....பாவம் நான் போகல்லேன்னா ரொம்ப வருத்தப்படுவா அக்கா..சாக்லேட்னா உசிரு அப்பா. பிறந்த நாள் பரிசுக்கு ஒரு பெட்டி சாக்லேட் தர்ரேன்னு சொல்லியிருக்கேன், அப்பா....''

''சீ, சீ; போடா உள்ளே.. பரிசு கொடுக்கப் போறானாம், பரிசு!'' அந்த வீட்டைப்பத்தி ஏதாவது பேசினா கன்னம் வீங்கிப் போய்விடும்..''

சந்திரனுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது அப்பாவின் வார்த்தைகளால். தன்னிடம் அன்பாக, உயிராகப் பழகும் தகப்பனார் தன் பெரியம்மாவின் பேரிலும் அக்காவின் பேரிலும் மட்டும் கோபப்படக் காரணம் என்ன என்றே புரியவில்லை அவனுக்கு. அவன் பெரியம்மாவே சொல்லியிருக்கிறாள்; ''உன் அப்பா எங்களிடம் கொண்டுள்ள பகைக்கும் துவேஷத்துக்கும் - காரணமேயில்லைடா சந்திரா. என்னமோ உங்க பெரியப்பா இருந்தபோது அண்ணன் தம்பிகளுக்குள் தாயாதிச் சண்டையாம். அவர் மறைந்தும் கூட அது மாறவில்லை உங்கப்பாவுக்கு. என்னமோ உங்க தலைமுறையில் அக்காவும் தம்பியுமாவது ஒற்றுமையா இருக்கிறதைப் பார்க்கச் சந்தோஷமாக இருக்கு'' என்று சொல்வாள்.

பத்மாவுக்குச் சதா ஏதாவது வியாதி படுத்திக்கொண்டே இருந்தது. அவள் வியாதியின்றி இருந்ததே அபூர்வம். அவளுக்கு இரண்டே விஷயங்கள்தான், உடல் கோளாற்றிலும் சந்தோஷமளித்தவை. ஒன்று சந்திரனுடன் விளையாடுவது; மற்றொன்று சாக்லேட் தின்பது. சாக்லேட் என்றால் அவளுக்குப் பைத்தியம். சதா தின்றுகொண்டே இருப்பாள். அதனால்தான் சந்திரனும் அடுத்த வாரம் வரப்போகும் அவள் பிறந்த தினத்திற்கு ஒரு பெட்டி சாக்லேட் பரிசு தருவதாகக் கூறினான். அப்பொழுது அவள் அடைந்த சந்தோஷம்! ஆனால்..அப்பா?

சதாசிவமும் பஞ்சநதமும் அண்ணன் தம்பிகள். சதாசிவத்தின் மகன் சந்திரன். பஞ்சநதத்தின் பெண்தான் பத்மா. இருவருக்கும் நிறையச் சொத்துக்கள் இருந்தன. பஞ்சநதம் நியாயபுத்தி படைத்தவர். சரளமான சுபாவமும் படைத்தவர். ஆனால் சதாசிவம் நேர்மாறான குணம் கொண்டவர். பேராசையும் பொறாமைக் குணமும் அதிகம். ஏதோ ஒரு சிறு நிலத் தகராறு கிளம்பியது அண்ணன் தம்பிகளுள்.

அது கோர்ட்டுவரை போய் பஞ்சநதத்திற்குச் சாதகமாகத் தீர்ப்பாகிவிடவே சதாசிவத்திற்குத் தாங்கவே முடியவில்லை. நெற்றிக் கண் மட்டுமிருந்திருந்தால் அண்ணனைச் சுட்டெரித்திருப்பார். அது முடியாத போனதால் சதா வாயால் எரித்துக்கொண்டே யிருந்தார். அண்ணன் ஒழிந்து, அந்தச் சொத்துக்களும் தம்மிடம் சேர்ந்துவிட வேண்டுமென்ற பேராசை அவரை வாட்டிக்கொண்டே யிருந்தது.

அவர் எண்ணத்திற்கு அநுகூலம் செய்வதுபோல் ஒரு நாள் திடீரென்று மாரடைப்பு என்று படுத்த பஞ்சநதம் இறந்து போனார். சதாசிவம் துக்கப்படுவதற்குப் பதில் சந்தோஷமடைந்தார். 'கொஞ்ச நாட்களில் அவன் மனைவியும் போய்விடுவாள். சொத்து நமக்குச் சேர்ந்துவிடும். பெண்ணோ வியாதி. நம்மிடமே கொண்டுவந்து வைத்துக்கொண்டால், கொஞ்ச நாளில் தீர்ந்துவிடும். சொத்து நம்முடையதுதான்' என்று மனத்தைத் தேற்றிக்கொண்டார். ஆனால்....

அவர் நினைத்தபடி நடவாமல் பஞ்சநதத்தின் மனைவி ஒருவாறு துக்கம் தெளிந்து தேறிவிட்டாள். குழந்தை பத்மா சதா வியாதியாக இருந்தாலும் சமாளித்துக் கொண்டே வந்தாள். இந்தச் சமயத்தில்தான் பெண் வாரிசு உரிமைச் சட்டமும் வந்தது. அண்ணன் மனைவி இறந்தால் சொத்து நமக்குத்தான்; பெண்ணுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கும் பொறுப்புத்தானே—அதுவும் உயிருடன் இருந்தால் என்று நினைத்துக்கொண்டிருந்தவருக்கு இந்தச் சட்டம் பெரிய 'ஷாக்'காக இருந்தது. இப்பொழுது நிலைமையே மாறிவிட்டது. அண்ணன் மனைவி உயிருடனிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றுதான். சட்டப்படி பெண் அல்லவா வாரிசு? ஆகவே பெண் ஒழிந்தால்தான் அவருக்குச் சொத்து. அதனால் ஆத்திரம் அதிகமாகியது.

அந்தப் பெண் ஒழிய வேண்டும். தானாக ஒழியாவிட்டால் ஏதாவது வழி செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றிக் கொண்டே இருந்தது. ஆனால் அதற்கு வழி? அது புரியாமல்தான் திணறிக்கொண் டிருந்தார். அதனால் ஏற்பட்ட கோபத்தில்தான் அவர் மகனைக் கண்டபடி திட்டினார் அவர்.

கொஞ்ச நேரம் உட்கார்ந்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டார் சதாசிவம். கோபம் தணிந்து அதைப்பற்றி யோசித்த பொழுது அவருக்குத் திடீரென்று ஓர் அருமையான - சுலபமாகத் தன் எண்ணம் ஈடேற - ஒரு யோசனை உதித்தது. திரும்பத் திரும்ப யோசித்துப் பார்த்தபின் சுலபமான வழி அதுதான் என்ற தீர்மானத்திற்கு வந்தார் அவர். அதைச் சரியாக நிறைவேற்றிவிட்டால் தம் ஆசைகளும் பூர்த்தியாகும். யாருக்கும் தம்மிடம் சந்தேகமும் தோன்றாது என்று நிச்சயித்தார். அவர் மனம் நிம்மதியாயிற்று; சந்தோஷம்கூட உண்டாயிற்று அவருக்கு.

''சந்திரா, சந்திரா!'' என்று குரல் கொடுத்தார் சதாசிவம். மறுபடி திட்டிக் கண்டிக்கத்தான் கூப்பிடுகிறார் என்ற எண்ணத்துடன் வந்து நின்றான் சந்திரன்.

''என்னடா, முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு நிற்கிறாய்?''

''......''

''பட்டணத்திலே கொஞ்சம் காரியம் இருக்கு, இன்னும் இரண்டு நாட்களில் போகப் போகிறேன். நீயும் வா. எக்ஸிபிஷன் எல்லாம் பார்த்துட்டு வரலாம்.''

''உம்..''

''என்னடா ஒரு மாதிரியாக இருக்கிறாய்?''

''ஒன்றுமில்லையப்பா.''

''பத்மாவின் பிறந்த நாள் ஞாபகமா?''

''உம்..''

''சாக்லேட்தானே கொடுப்பதாகச் சொன்னாய்! ஒரு பெட்டி நான் வாங்கித் தருகிறேன். ஊருக்குக் கிளம்புமுன் நீயே கொடுத்து விட்டு வந்துவிடு.''

சந்திரனுக்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. சொல்வது தன் அப்பாவேதானா என்ற சந்தேகமே வந்துவிட்டது அவனுக்கு. கொஞ்ச நேரத்திற்கு முன் கண் மண் தெரியாமல் திட்டியவர் இப்பொழுது இப்படிச் சொல்வதன் காரணம் புரியாமல் விழித்தான் அவன்.

''என்னடா முழிக்கிறே? நிஜந் தாண்டா; பாவம், உன் ஆசையைக் கொடுப்பானேன், போ!''

* * *

வீட்டு வாசலில் வண்டி ஒன்று தாயாராக நின்றுகொண்டிருந்தது. பெட்டி படுக்கைகள் அதில் வைக்கப்பட்டன. வாசற்படியிலே நின்றுகொண்டிருந்த சதாசிவம் 'சந்திரா' என்று அழைத்தார். உள்ளிருந்து துள்ளி ஓடி வந்தான் சந்திரன்.

''ஏய், இந்தாடா; இந்தச் சாக்லேட் பெட்டியைப் பத்மாவிடம் கொடுத்துவிட்டு, சீக்கிரமா ஓடியா. ரெயிலுக்கு நாழியாச்சு'' என்று பளபள வென்று இருந்த ஒரு சாக்லேட் பெட்டியை நீட்டினார் சதாசிவம்.

பெட்டியை வாங்கிக்கொண்டு மகிழ்ச்சியுடன் ஓடினான் சந்திரன். நான்கு வீடுகளுக்கு அப்பாலிருந்த பத்மாவின் வீட்டிற்குள் நுழைந்தான். ''பத்மா பத்மா'' என்று குரல் கொடுத்தான். அவள் வழக்கமாக இருக்கும் அறைக்குள் நுழைந்தான்.

கட்டிலில் படுக்கையின்மேல் உட்கார்ந்திருந்தாள் பத்மா.

''பத்மா, பத்மா; இந்தா உன் பிறந்த நாளுக்கு என் பரிசு. அவசரமாக நான் பட்டணம் போகிறேன்; அன்று உன்னோடு சந்தோஷமாக இருக்கமுடியாதே என்று வருத்தமாக இருக்கிறது. ஆயினும் இன்னும் ஒரு வாரத்தில் கட்டாயம் வந்து விடுவேன். உன் பிறந்த நாள் அன்று இதைச் சாப்பிடு. என்னை நினைத்துக்கொள்..'' என்று அவளைத் தட்டிக்கொடுத்து விட்டுத் திரும்பினான் சந்திரன். அவனையே மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் பத்மா.



ஏணிக்காரர்: நான்தான் மிருக டாக்டர். ஒட்டைச் சிவிங்கிக்கு வைத்தியம் பண்ண வந்திருக்கேன்.

சதாசிவத்தின் திட்டப்படி நாட்கள் கழிந்தன. தம் எண்ணப்படி எல்லாம் நடந்திருக்குமென நம்பினார் அவர். இனி ஊருக்குப் போகலாம் என்று தீர்மானித்தார்.

ஊருக்குள் நுழைந்ததுமே எல்லோரும் துக்கம் கேட்க வருவார்கள். 'ஐயோ பாவம்' என்று தாமும் துக்கப்படுவது போல் கொஞ்ச நாட்கள் நடக்க வேண்டும். ''என்னமோ வியாதியாகவே இருந்த பொண்ணு திடீர்னு போயிட்டுது'' என்று சொல்வார்கள். அதற்குத் தக்கபடி எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டார்.

ரெயிலில் வரும்போதெல்லாம் அவருக்கு இதே ஞாபகம்தான். பத்மாவைப் பார்க்கலாமே என்று குஷியாக இருந்தது சந்திரனுக்கு.

ஊருக்குள் நுழைந்தபோதே ஏதாவது பரபரப்பான விஷயம் காதில் படுகிறதா என்று பார்த்தார். ஒன்றும் தெரியவில்லை; வீட்டிற்குள் வந்து வெகு நேரமாகியும் செய்தி ஒன்றும் அவர் எதிர்பார்த்தது காதில் விழவில்லை. அவருக்கு ஏமாற்றமாகவும் இருந்தது, 'என்ன, என்ன நடந்தது' என்று தெரிந்து கொள்ளவும் ஆவலாக இருந்தது.

"சந்திரா, சந்திரா!" என்று அழைத்தார். அவன் அங்கிருந்தால்தானே?

பத்மாவின் கட்டிலருகில் உட்கார்ந்து மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டிருந்தான் சந்திரன். அவளுக்கு உடம்பு அசௌகரியமென்றும் ஒரு வாரமாக எழுந்திருக்கவே இல்லை என்றும் கேட்க வருந்தமாக இருந்தது அவனுக்கு.

பேசிக்கொண்டே இருந்தவன் அவள் தலைமாட்டில் தான் கொடுத்த சாக்லேட் பெட்டி இருப்பதைப் பார்த்தான். அதைக் கையிலெடுத்துக் கொண்டான்.

"பத்மா, இதை நீ பார்க்கவே இல்லையா? அப்படியே வைத்திருக்கிறாயே!" என்றான்.

"நான் கஞ்சி தவிர எதுவும் சாப்பிடக்கூடாது என்று டாக்டர் கடுமையான உத்தரவு போட்டுவிட்டார். ஆகையால் அப்படியே வைத்துவிட்டேன். அவர் சாப்பிடலாமென்று சொன்னவுடன் எல்லாவற்றையும் தின்றுவிடலாமென்றுதான் தலைமாட்டிலேயே வைத்திருக்கிறேன். சந்திரா, நீ இரண்டு எடுத்துச் சாப்பிடேன்; என் பிறந்தநாள் பரிசுகளை உனக்குக் காட்டுகிறேன்" என்றாள் பத்மா.

ஒன்றை எடுத்துச் சாப்பிட்டான் சந்திரன். கொஞ்சநேரத்தில் வயிற்றைப் புரட்டுவது போலவும் தலையைச் சுற்றுவது போலவும் தோன்றியது.

"எனக்கு உடம்பு சரியாக இல்லை. வீட்டிற்குப் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வீட்டை நோக்கி ஓடினான்.

வீட்டு வாசற்படி ஏறியபொழுது மயக்கம் அதிகமாக இருந்தது; வயிற்றைப் பிடித்து இழுத்தது; உடம்பு எரிந்தது. இடைகழியில் நுழையும்பொழுதே, "அப்பா, அப்பா" என்று கூப்பிட்டுக் கொண்டே 'தடா'லென்று விழுந்துவிட்டான்.

சப்தம் கேட்டு ஓடி வந்த சதாசிவம் பையன் விழுந்து கிடப்பதைப் பார்த்ததும் பதறினார். "சந்திரா, சந்திரா!" என்று கூப்பிட்டார். பதிலில்லை. அவர் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியது. அவனைத் தூக்கிப் படுக்கையில் கிடத்திவிட்டு டாக்டரை

வரவழைத்தார். பக்கத்தில் நின்று புலம்பிக்கொண்டே இருந்தார் சதாசிவம்.

வெகு நேரம் பரீட்சித்த டாக்டர் பரபரப்பாக மருந்துகள் கொடுப்பதிலும் ஊசிகள் போடுவதிலும் முனைந்தார்.

''டாக்டர், அவன் உடம்புக்கு என்ன? ஒன்றும் பயமில்லையே'' என்று கவலையுடன் விசாரித்தார்.

''ஏதோ உணவில் விஷம் கலந்திருக்கிறது. என்னால் முடிந்ததைப் பார்க்கிறேன். பிழைப்பது நிச்சயமில்லை'' என்று டாக்டர் கூறியதும் அசந்து போய்விட்டார் சதாசிவம். அவர் உள்ளம் கொந்தளித்துகொண்டிருந்தது.

டாக்டர் சென்றதும் அவன் படுக்கையிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தார் சதாசிவம். கொஞ்ச நேரத்திற்குப் பின் கண்ணைத் திறந்து நோக்கினான் சந்திரன். ''சந்திரா, சந்திரா, கண்ணே, என்னடா, எங்கேடா போனே? என்னடா தின்னே?'' என்று புலம்பினார் சதாசிவம். அவன் தலையை அன்புடன் தடவினார்.

''பத்மா வீட்டிற்குப் போனேன். பிறந்த நாளுக்காக நீ கொடுத்த சாக்லேட் பெட்டி.. அவளுக்கு உடம்பு சரியில்லை.. சாப்பிடவில்லை...இப்போ எனக்கு ஒண்ணு கொடுத்தாள்....மயக்கம்..'' அதற்குமேல் பேச முடியவில்லை திணறினான் அவன்.

மிரள மிரள நோக்கினான் சந்திரன். அவன் கண்கள் பயங்கரமாக மிரண்டன. பிறகு அப்படியே மூடிக்கொண்டன.

விஷயத்தைப் புரிந்து கொண்டார் சதாசிவம். பத்மாவுக்கு என்று தாம் கொடுத்தனுப்பிய சாக்லேட்டில் விஷம் கலந்த ஒன்றைத் தன் மகனே தின்றுவிட்டான் என்பது தெரிந்தது. அங்கேயே நின்று கதறினால் தம் பையனுக்கு விஷயம் தெரிந்து விடும். தம்மைக் கொலைகாரன்

என்று நினைத்துவிடுவானே என்று துடித்தது அவர் மனம். தன் வினை தன்னைச் சுடும் என்பது சரியாகிவிட்டதே என்று மனத்திற்குள்ளாகவே கதறினார்.

பொறுக்க முடியாமல் அந்த அறையிலிருந்து வெளியே ஓடி வந்தார். அவருக்கு மூளையே குழம்பிவிடும் போலிருந்தது; பைத்தியம்போல் கதறி அழுதார்.

"ஆண்டவனே! என் மகனைக் காப்பாற்றமாட்டாயா! இனி இந்த உலகில் யாருக்குமே கெடுதல் நினைக்கமாட்டேன். என் மகனைக் கொன்று விடாதே" என்று அலறினார். துக்கம் தாங்காமல் அப்படியே மயக்கமானார். அந்த மயக்கத்தில் தன் மகன் இறந்துபோவது போல் கெட்ட கனுக் கண்டு அலறி எழுந்தார்.

எதிரே நின்றுகொண் டிருந்தார் டாக்டர். "ஓய், சதாசிவம்? என்ன ஐயா, தூங்குகின்றீர்? பயப்படாதேயும். உம் மகன் பிழைத்து விட்டான். போய்ப் பாரும்" என்றார் அவர். ஆனந்தத்துடன் ஓடினார் சதாசிவம்.

மெல்லக் கண்ணை விழித்துக் கொண்டிருந்தான் சந்திரன். சதாசிவம் அவனைத் தடவி முத்தமிட்டார். "அப்பா பிழைத்து விட்டாயா!" என்று அவனைத் தழுவிக்கொண்டார்.

"நல்லவேளை, அப்பா. நாம் ஊரில் இல்லாதபோது பத்மா இந்தச் சாக்லெட்டைத் தின்னமல் இருந்தாளே!" என்று உண்மையான மகிழ்ச்சியோடு உருக்கமாகக் கூறினான் சந்திரன்.

"நாளை உடம்பு குணமாகட்டும்; பத்மா வீட்டிற்குப் போகலாம். நானும் வருகிறேன். இனிப் பழைய சண்டையை மறந்துவிடப் போகிறேன்" என்றார் சதாசிவம்.

ஆனந்தக் கண்ணீர் விட்டான் சந்திரன்.

டால்ஸ்டாய் சொன்ன கதை

ஒருவனுக்கு இரண்டு பையன்கள். இருவரும் ஒற்றுமையில்லாமல் இருப்பதைக் கண்டு அவர்கள் தகப்பன் கவலைப்பட்டான். சாகும் சமயத்தில் அவன் இதே கவலையோடு, "குழந்தைகளே. நீங்கள் இருவரும் சண்டையிடாமல் சொத்துக்களைச் சரியாகப் பிரித்து எடுத்துக்கொள்ளுங்கள்" என்றான்.

அவன் இறந்ததும் பிள்ளைகள் இருவருக்கும் சொத்துப் பிரிவினையில் சண்டை வந்துவிடும் போலிருந்தது. ஆகவே பக்கத்து வீட்டுக்காரனை அழைத்து அவன் யோசனைப்படி நடக்க முடிவு செய்தார்கள்.

பக்கத்து வீட்டுக்காரன் வந்தான். "சரி; உங்கள் தந்தை சாகும்போது என்ன சொன்னார்?" என்று கேட்டான்.

"எல்லாச் சொத்துக்களையும் சரிபாதியாகப் பிரித்துக்கொள்ளும்படிச் சொன்னார்."

"அப்படியானல் துணிமணிகளை இரண்டாகச் சரி பாதியாகக் கிழியுங்கள். சாமான்களை இரண்டாக உடைத்து ஆளுக்கு ஒன்று எடுத்துக் கொள்ளுங்கள். ஆடுமாடுகளை இரண்டு இரண்டாக வெட்டி ஆளுக்கு ஒரு பாதி எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான் அவன்.

அண்ணன் தம்பி இருவரும் அடுத்த வீட்டுக்காரன் சொன்ன துர்யோசனைப்படி செய்தார்கள். கடைசியில் அவர்களுக்கு மிஞ்சியது என்ன? ஒன்றுமே இல்லை.

என்ன பயன்?

பெஞ்சமின் பிராங்க்ளின் ஒரு பிரபல விஞ்ஞானி. ஒரு சமயம் முதல் முதலாகப் பிரான்சில் ஒரு பலூனைப் பறக்க விட்டார்கள். அவருடைய நண்பர் - அவருக்கு எதுவும் பிடிக்காது - அவரும் பிராங்க்ளினோடு அதை வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தார்.

"இந்தப் பலூனிஞல் உலகத்துக்கு என்ன பயன்?" என்றார் நண்பர்.

"இதோ பாரும். புதிதாகப் பிறந்த குழந்தையினல் என்ன பயன்?" என்றார் பிராங்க்ளின்.

தெய்வ தண்டனை

ரா. ஆறுமுகம்

பள்ளி மாணவர்கள் சுமார் நூறு பேர் ரெயில்வே பிளாட்பாரத்தில் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். திருச்சி ஜங்ஷனிலிருந்து தென்காசி செல்லும் ரெயிலும் மெதுவாக வந்து நின்றது. மாணவர்களுக்கென்று 'ரிஸர்வ்' செய்யப்பட்ட பெட்டியைத் தேடி பள்ளி ஆசிரியர் ராமநாதன் இங்கு மங்கும் சென்று கடைசியாகக் கண்டுபிடித்து, மாணவர்களையெல்லாம் அங்கே வரும்படி தூரத்திலிருந்தே சைகை காட்டினார். அவர்களும், ஒழுங்காக, வரிசையாகச் சென்று ஒருவர் பின் ஒருவராக வண்டியில் ஏறி அமர்ந்தார்கள். பையன்களெல்லாம் சரியாக இருக்கிறார்களா என்று ஆசிரியர் எண்ணிப் பார்த்தார். பின்பு பிரயாணம் செய்கையில் மாணவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப்பற்றி வண்டிக்குள்ளிருந்தபடியே ஒரு சிறு பிரசங்கம் செய்தார். மாணவர்களும் அமைதியாகக் கேட்டார்கள். சற்று நேரத்தில் ரெயிலும் புறப்பட்டது. அவர்களெல்லாம் குற்றால நீர் வீழ்ச்சியைப் பார்த்துவர உல்லாச யாத்திரை கிளம்பியவர்கள். வண்டி புறப்பட்டவுடனேயே பிளாட்பாரத்திற்கு மறு பக்கமிருந்து இரண்டு சிறுவர்கள் சட்டென வண்டியில் தாவியேறி, கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தார்கள். அதைப் பார்த்த அருகிலிருந்த மாணவர்கள், "ஏம்பா. நீங்கள் எந்தப் பள்ளியில் படிக்கிறீர்கள்?" என்று விளையாட்டாகக் கேட்டார்கள். அதைக் கேட்டு மற்றவர்கள் 'கொல்' என்று சிரித்தார்கள்.

அந்த இரண்டு பேரும் அணிந்திருந்த கிழிந்த சட்டை, அழுக்கு வேஷ்டி, பறட்டைத் தலை, ஆகியவற்றைப் பார்த்ததுமே மாணவர்களுக்கு அவர்கள் டிக்கட்டு இல்லாமல் பிரயாணம் செய்யும் 'ரெயிலோடிகள்' என்று தெரிந்துவிட்டது. ஒவ்வொரு மாணவனும் அவனவனுக்குத் தோன்றியபடியெல்லாம் அந்தப் பையன்களிருவரையும் கேலி செய்ய ஆரம்பித்து விட்டான். பாவம், அவர்களிருவரும் சாதாரணப் பிரயாணிகளின் வண்டியென்று நினைத்து ஏறி விட்டார்கள். மாணவர்களின் 'கேலி'யைக் கேட்கச் சகியாத அவர்கள் உடனே மறு வண்டிக்குத் தாவிப் போக முயன்றார்கள். ரெயில் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட ஆசிரியர் ராமநாதன் அச்சிறுவர்களைத் தடுத்து நிறுத்தி, மாணவர்களையும் லேசாகக் கண்டித்தார். பையன்கள் இருவரும் கதவின் ஓரமாக உட்கார்ந்து விட்டார்கள். ரெயிலின் வேகமும் அதிகமாகியது. மாணவர்கள் 'சளசள'வென்று அவரவர்களுக்குத் தோன்றிய விஷயங்களைப்பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

சடாரென அவர்களிருந்த வண்டியின் கதவைத் திறந்து கொண்டு ஒரு டிக்கட் பரிசோதகர் உள்ளே வந்தார். மறு கோடியில் பயந்து கொண்டே மறைந்து உட்கார்ந்திருந்த 'ரெயிலோடிகள்' இருவரும் அதைப் பார்த்ததும் அடுத்த வண்டிக்குத் தாவி ஓட எத்தனித்தார்கள். அதைக் கவனித்த ஆசிரியர் அவர்களைத் தடுத்து, பரிசோதகரிடம் தான் சொல்லிக் கொள்வதாகக் கூறிச் சமாதானப்படுத்தி உட்கார வைத்தார்.

டிக்கட் பரிசோதகர், வண்டிக்குள்ளிருந்தவர்களையெல்லாம் பார்த்ததும், "ஓஹோ, இது 'எக்ஸ்கர்ஷன்' பார்ட்டியா? சரி. உங்கள் உபாத்தியாயர் எங்கே?" என்று ஒரு மாணவனைக் கேட்டார்.

அவன் ஆசிரியர் இருந்த இடத்தைச் சுட்டிக் காட்டினான். அவர் விர்ரென்று நேரே அங்கே சென்றார். ஆசிரியரும் மாணவர்கள் அத்தனை பேருக்கும் எழுதி வாங்கியிருந்த ரெயில்வே பாஸை எடுத்துக் காண்பித்தார். அதில் ஒரு கையெழுத்துப் போட்டு விட்டு, கதவோரமாக உட்கார்ந்திருந்த அந்த 'ரெயிலோடிகள்' இருவரையும் முறைத்துப் பார்த்தார். அந்தப் பையன்கள் பயந்து கொண்டே எழுந்து நின்றார்கள்.

''ஏன் சார், இவர்கள் உங்கள் கோஷ்டியைச் சேர்ந்தவர்களல்லவே?'' என்று கேட்டுக்கொண்டே பரிசோதகர் அவர்களின் அருகே சென்றார். ''இல்லை, பாவம். ஏழைப் பையன்கள் போலிருக்கிறது. உங்களைக் கண்டதுமே அடுத்த வண்டிக்குத் தாவப் பார்த்தார்கள். நான்தான் தடுத்து உட்கார வைத்தேன்'' என்றார் ஆசிரியர்.

''இவன்களுக்கு இதே தொழில் தான் சார். இவங்களால் எங்களுக்கு எவ்வளவு தொல்லை தெரியுமா?....ஏண்டா, இதென்ன உங்கப்பன் வீட்டு ரெயிலா, பாட்டன் வீட்டு ரெயிலா. டிக்கட்டில்லாமல் ஏறி ஏண்டா என் கழுத்தை அறுக்கிறீங்க....?'' என்று சொல்லிக் கொண்டே, இரண்டு கைகளாலும் இருவருடைய காதுகளையும் பிடித்துத் தம் பலம் கொண்ட மட்டும் நிமிண்டினார் பரிசோதகர். அந்தப் பையன்கள், ''சார். சார். இனி வரமாட்டோம். விட்டிடுங்க...'' என்று கெஞ்சினார்கள். அவரோ அதைக் காதில் போட்டுக் கொள்ளாமலே சட்டெனக் காதை விட்டுவிட்டுப் பளார் பளார் என்று இருவருக்கும் அறை கொடுத்தார். பையன்கள் அடி தாங்காமல் சுருண்டு வண்டிக்குள் விழுந்தார்கள். விழுந்தவர்களைத் தம் பூட்ஸ் காலால் எட்டி உதை உதையென்று உதைத்தார், அந்தச் சிறுவர்கள் 'ஐயோ, ஐயோ' என்று அலறினார்கள்.

அவ்வளவையும் பொறுமையாகப் பார்த்துக்கொண்டிருந்த ஆசிரியர், சடாரென எழுந்து பரிசோதகரை நோக்கி, ''நீங்கள்

வேடிக்கைப் புது மொழிகள்

1. வம்பன் வீட்டு வாரியல் கட்டையும்
வசை பாடும்!
2. காலை எழுந்தவுடன் காபி;
பின்பு—
கனிவு கொடுக்கும் நல்ல
'ஹாபி'!
3. கர்லா சுழற்றும் கந்தசாமி,
பிர்லாவாகப் பிரியப்
பட்டானாம்!
4. நல்லவனுக்கும் நல்லவன்
நானிலத்தில் உண்டு!
5. பாம்பின் விஷம்போல,
பச்சரிசி விலைபோல!
6. சீட்டும் சினிமாவும்
சீரழிக்கும் இரு நோய்கள்!
7. தப்படி போட்டுத்
தரையை அளக்க,
செப்படி வித்தை தெரிய
வேண்டுமா?
8. சூயெஸ்ஸில் சண்டை
என்றால்,
யூயெஸ்ஸில் விலை ஏறுவா
னேன்?
9. இஞ்சி விலை ஏன் கிராக்கி
என்றால் எகிப்து நாட்டில்
சண்டை நடக்கிறதாம்!
10. குண்டு மழையில் தப்பிப்
பிழைக்க, நண்டு வளையில்
பதுங்க முடியுமா?
11. கண்டி எங்கே இருக்கிறது
என்றால் கிண்டிக்குப் பக்
கத்தில் என்றானும்!
12. அலைகடலோடியும்
அமைதியை நாடு!
13. தொந்தி இருந்தால்
சந்தி சிரிக்கும்!
14. திட்டும் வாய்க்கு மாட்டு,
திண்டுக் கல்லுப் பூட்டு!

—எ. ந. க

செய்வது சரியல்ல. டிக்கட்டில்லாமல் வந்த அவர்களை அடுத்த ஸ்டேஷன் வந்ததும் இறக்கி விடுங்கள். இல்லையானால் சட்டப்படி செய்ய வேண்டியதைச் செய்து அவர்களுக்குத் தண்டனை கொடுக்க வழி செய்யுங்கள்'' என்று கோபமாகச் சொன்னார். மாணவர்களும் அங்கே வந்து கூடிவிட்டார்கள்.

''சார், உங்களுக்கு ஒன்றும் தெரியாது. அடுத்த ஸ்டேஷனில் இறக்கி விட்டால், மறுபடியும் வண்டி புறப்பட்டவுடன் எப்படியாவது தொத்திக்கொண்டு விடுவார்கள். சட்டப்படி இவர்களைச் சார்ஜ் பண்ணினால், கட்டணப் பணம் எங்கே இருக்கப் போகிறது? இப்படி இரண்டு அறை கொடுத்து விரட்டினால்தான் இனி ஏறமாட்டார்கள்'' என்று தம் அநுபவத்தைச் சொன்னார் பரிசோதகர்.

''உங்கள் மகன் ஒருவன் இப்படி டிக்கட்டு இல்லாமல் வந்து வேறொரு பரிசோதகர் அவனை இவ்விதம் உதைத்தால் உங்கள் மனம் என்ன பாடுபடும்?'' என்று மாணவர்களில் ஒரு துணிச்சலான பையன் அவரைக் கேட்டான்.

''இது யாரப்பா முந்திரிக் கொட்டை? நான் இந்த உத்தியோகத்தில் இருபத்தைந்து வருஷமாக இப்படி எத்தனையோ ஆயிரம் பேரை உதைத்து மிதித்து விரட்டியிருக்கிறேன். ஒரு பிரயாணியாவது என்னை ஏன் என்று கேட்டதில்லை, தெரியுமா?'' என்று மீசையை முறுக்கினார் பரிசோதகர்.

''இனி, இந்தப் பையன்கள் மேல் உங்கள் கை பட்டால் கட்டாயம் நானே உங்களைப் பற்றி அடுத்த ஸ்டேஷனில் புகார் செய்வேன், தெரியுமா?'' என்றார் ஆசிரியர் குறுக்கிட்டு.

ஆசிரியருக்கும் பரிசோதகருக்கும் வார்த்தைகள் தடித்தன. இருவரும் 'கை வைத்து'க் கொள்ளும் நிலைக்கு வந்து விட்டார்கள். நல்ல வேளையாக வண்டியிலிருந்த பெரிய மாணவர்கள் தலையிட்டு அவர்களை விலக்கி விட்டார்கள். அந்தக் கோபத்தில் பரிசோதகர், ''சரி, அடுத்த ஸ்டேஷன் வரட்டும். உங்களையெல்லாம் என்ன செய்கிறேன் பாருங்கள்'' என்று கறுவிவிட்டு ரெயில் வேகமாய் ஓடிக்கொண் டிருக்கும்போதே கதவைத் திறந்து, மறு வண்டிக்குத் தாவினார். மாணவர்களில் சிறுவர், அவர் எப்படி அடுத்த வண்டிக்குப் போகிறார்

என்பதை ஜன்னல் வழியே தலையை நீட்டிப் பார்த்தனர். கோபத்தில் வேகமாகத் தாண்டியவர், கால் தவறி இரண்டு வண்டிகளுக்கு மிடையில் தடாலென்று விழுந்து விட்டார் தரையில், அவர் தலை வெளிப்பக்கமும், கால்கள் தண்டவாளப் பக்கமுமாக விழுந்தார். மாணவர்கள், ''ஐயோ, விழுந்திட்டார்'' என்று சத்தம் போட்டார்கள். உடனே அவர்களின் ஆசிரியர் சங்கிலியைப் பிடித்து இழுத்து விட்டார். ரெயில் சற்றுத் தூரம் சென்று நின்றது. ஆசிரியரும் சில மாணவர்களும் இறங்கி ஓடினர்கள். மற்ற வண்டிகளிலிருந்த பிரயாணிகளும் ஓடி வந்தார்கள். எஞ்சின் டிரைவர், கார்டு, போலீஸ் ஜவான்கள் எல்லோரும் கூட்டம் நின்ற இடத்திற்கு ஓடினர்கள். டிக்கட் பரிசோதகர் தலையிலிருந்து ரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. வலது கால்,முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டு விட்டது. அவர் உணர்ச்சியற்று மயங்கிக் கிடந்தார்.

''ச்சு, ச்சு, என்ன பரிதாபம்!'' என்று ஆசிரியர் இரக்கப்பட்டார்.

''விபத்து எப்படி ஏற்பட்டது, எந்த வண்டியிலிருந்து விழுந்தார்?....'' என்ற விவரங்களையெல்லாம் கேட்டார் கார்டு. அதற்குள் போலீஸ் ஜவான்கள் கார்டு வண்டிக்கு ஓடி, அங்கிருந்த 'ஸ்ட்ரெச்சரை'க் கொண்டு வந்து அடிபட்ட பரிசோதகரை அதில் மெதுவாகத் தூக்கிப் படுக்க வைத்து கார்டு வண்டிக்கே தூக்கிச் சென்றூர்கள். கார்டு கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பள்ளி ஆசிரியர் விவரமாகப் பதில் அளித்தார். அவைகளையெல்லாம் கார்டு குறித்துக் கொண்டு, தம் வண்டிக்கு ஓடி, பரிசோதகருக்குச் செய்ய வேண்டிய முதல் சிகிச்சைகளைச் செய்து, ரெயிலை விடும்படி ஊதினர். வண்டியிலிருந்து இறங்கியவர்கள் எல்லாம் ஏறியதும் வண்டி புறப்பட்டது.

மாணவர்களெல்லாம் அந்தக் கோர விபத்தைப் பார்த்துத் திகிலடைந்து போய் உட்கார்ந்திருந்தனர். ''அந்தப் பரிசோதகருக்கு கடவுள் உடனேயே தண்டனையளித்து விட்டார்'' என்றான் ஒரு மாணவன்.

''இல்லை. உடனேயே கொடுக்கவில்லை. இருபத்தைந்து வருஷங்களாக, கால் நூற்றாண்டாக, கடவுள் பொறுத்துப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத்தான் கொடுத்திருக்கிறார். நான்கூட இந்த டிக்கட் பரிசோதகரிடம், சற்று முன்பு இந்தப் பையன்கள் வாங்கிய அடியைப் போல், வாங்கியிருக்கிறேன். அப்போது நான் சிறுவன், வீட்டில் கோபித்துக் கொண்டு டிக்கட்டு இல்லாமல் பிரயாணம் செய்தேன்....'' என்று தம் அநுபவத்தையும் விவரமாகச் சொன்னர் ஆசிரியர். மாணவர்கள் அதை ஆச்சரியத்தோடு கேட்டு, ''அப்படியானல் பரிசோதகரின் இரண்டு கால்களும் துண்டிக்கப்படவேண்டும்'' என்று சபித்தார்கள்.

''அவர் தம் கடமையைச் செய்ய வேண்டிய முறையில் செய்யாமல் தன்னிச்சையாக, டிக்கட்டில்லாதவர்களை மிருகமாகக் கருதி நடந்துகொண்டதால் தான், அவருக்குக் கடவுள் இந்தத் தண்டனையைக் கொடுத்தார். இனி அவருக்கு உணர்வு வந்த பின்பு தான் இதை உணர்வார். ஆகையால் நீங்களும், பெரியவர்களாகி உத்தியோகம் பார்க்கும்பொழுது, ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுங்கள்'' என்று உபதேசம் செய்தார் ஆசிரியர்.

ரெயில், அடுத்த ஸ்டேஷனில் நின்றதும் அடிபட்ட பரிசோதகரை வண்டியிலிருந்து இறக்கி, அந்த ஊரிலிருந்த ஆஸ்பத்திரிக்குப் பந்தோபஸ்துடன் அனுப்பி வைத்தார் ஸ்டேஷன் மாஸ்டர். மாணவர்கள் இருந்த வண்டிக்குள் நடுங்கிக் கொண்டேயிருந்த ரெயிலோடிகள் இருவரும், தங்களுக்கு ஏதாவது அதனல் கஷ்டம் வருமோ என்று பயந்து வண்டி நின்றதும் மறுபக்கமாக இறங்கி ஓட்டம் பிடித்தார்கள்.

மாணவர்களின் உல்லாசப் பிரயாணம் தொடர்ந்து சென்றது.

பட்டம் பெற்ற புளுகுமணி

வீர. வேலுசாமி

அன்று செந்நெல்புரி பொழுது போக்கு மண்டபத்தில், மணி இரவு பதினொன்றாகியும் கூட்டம் சிறிதும் கலையாமல், பெருந் திரளாக இருந்தது. ஆங்காங்கே கூடியிருந்த மக்கள் பேசிக்கொண்டதிலிருந்து அடுத்தபடியாக நிகழவிருக்கும் 'புளுகு மணி' பட்டத்திற்கான போட்டியைக் காண்பதற்கே இவ்வளவு கூட்டம் என்று தெரியவந்தது. அந்தச் சமயத்தில் மேடைமீது இருந்த ஒலிபெருக்கி, "நமது ஊர் பொழுதுபோக்குச் சங்கத்தின் ஆதரவில் 'புளுகு மணி' பட்டத்திற்கான போட்டி நடைபெறும். பிரபல உள்ளூர்ப் புளுகர்கள் திரு வேட்டுப் புளுகு வெங்கிட்டுவும், திரு குண்டுப் புளுகு குருசாமியும் கலந்து கொள்வார்கள். போட்டியாளர்கள் தாங்கள் கூறும் வார்த்தைகளில் நிஜக் கலப்பே இல்லாதபடி பார்த்துச் சொற்போர் நிகழ்த்த வேண்டுமென்பதை அவர்களுக்கு நினைவுறுத்திவிட்டுப் போட்டியை ஆரம்பித்து வைக்கிறேன். முதலாவதாக திரு வேட்டுப் புளுகு வெங்கிட்டு அவர்கள் போட்டிக்கான தமது சொற்பொழிவை நிகழ்த்துவார்கள்" என்று அறிவித்தது. நான் இந்த நூதனப் போட்டியைக் கண்டு களிப்பதற்காக முண்டியடித்துக்கொண்டு மேடைக் கருகில் சென்று அமர்ந்து போட்டியைக் காணத் தயாரானேன்.

வேட்டுப் புளுகர் உற்சாகமாக, கூட்டத்தினருக்கு ஒரு 'போஸ்' கொடுத்துக்கொண்டே ஆரம்பித்தார். "சபையோர்களே! வணக்கம். நானும் எனது தகப்பனாரும் சமீபத்தில் நடைபெற்ற சூயஸ் கால்வாய்ப் போரை வேடிக்கை பார்க்கும் பொருட்டு எங்கள் வீட்டு எருமையில் ஏறிக் கொண்டே எகிப்துக்குச் சென்றோம். எகிப்தில், பாகிஸ்தான் தூதுவராலயத்தினர், எங்களை வரவேற்றுப் போர் நிகழ்ச்சிகளைக் காணுதற்குரிய பல வசதிகளையும் செய்து கொடுத்தனர். அங்குள்ள ஒரு 'பிரமிட்' கோபுரத்தின் உச்சியில் நின்றுகொண்டு எகிப்துப் படையினருக்கும், இஸ்ரேல் படையினருக்கும் இடையே நடைபெற்ற கைகலப்பைக் கண்டு களித்துக்கொண்டிருந்தோம். அந்தச் சமயம் ஒரு விமானம் (ரஷ்ய விமானமாகத்தான் இருக்க வேண்டும்!) எங்கள் தலைக்கு மேலே பறந்து வந்து, எங்கள்மீது ஏதோ ஒரு பொருளை வீசி எறிந்துவிட்டுச் சென்றது. அந்தப் பொருள் எனது தந்தையின் தலையில் வீழ்ந்து, உள்ளே பதிந்து விட்டது. அதை நன்றாகச் சோதித்துப் பார்த்ததில், அது ஒரு வகையான வெடிகுண்டு என்றும் இன்னும் நாற்பது மணி நேரத்தில் வெடித்துவிடும் என்றும் தெரியவந்தது. உடனே ஆபரேஷன் செய்து எடுத்தால் அன்றி என் தந்தை பிழைப்பது அரிது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. அங்கே நல்ல டாக்டர்கள் இல்லாததால், நாங்கள் விரைந்தோடி இந்தியா வந்து, நம்மூர் நாட்டு வைத்தியர் நாடிமுத்துப் பிள்ளையிடம் 'ஆபரேஷன்' செய்து, குண்டை எடுத்துவிட்டோம். குண்டு எடுக்கப்பட்டுக் குணமாகிவிட்ட குஷியில் வேகமாக நடந்து வந்த என் தந்தை வைத்தியர் வீட்டு வாசற்படிக்கட்டுத் தடுக்கிக் கீழே விழுந்து அந்தக் கணமே உயிர் துறந்தார். எனது தந்தையின் வீர மரணத்தை நினைக்கும்போது எனக்குத் துக்கம் பொங்குகிறது. எனவே மேலே பேசுவதற்கு நா.. எழ..வி..ல்லை. இ..த்..துடன் முடி..த்..துக்கொ..ள்கிறே..ன்" என்று துக்கம் பொங்கத் தம் சொற்பொழிவை முடித்துவிட்டு

கியூ வரிசையில்

''அடே சீக்கிரமா போங்கய்யா, படம் ஆரம்பிச்சிடப்போறது-''

''அடே இருமய்யா. இங்கே நான் உள்ளேயே போக முடியாமே அவஸ்தை பட்டுண்டிருக்கிறேன். அதுக்குள்ளே....''

உட்கார்ந்தார். கூட்டத்தினர் பலமான ஆரவாரத்துடன் கரகோஷம் செய்தனர். சப்தம் அடங்கியதும் தலைவர் எழுந்து, ''இவ்வளவு நேரம் நீங்கள் 'வேட்டுப் புளுகர்' புளுகு மாளிகைகளைக் கேட்டு மகிழ்ந்தீர்கள். அடுத்தபடி திரு குண்டுப் புளுகு குருசாமி தம் புளுகுரைகளை மொழிந்து உங்களை மகிழ்விப்பார்'' என்று அறிவித்து விட்டுத் தம் ஆசனத்தில் அமர்ந்தார்.

குண்டுப் புளுகர் எழுந்திருந்து தமது புளுகு மூட்டையை அவிழ்த்துவிட ஆரம்பித்தார்! ''அன்பர்களே! அனைவருக்கும் என் வணக்கம். எனது நண்பர் வெங்கிட்டு அவர்கள் உங்களிடம் தமது எகிப்துப் பயணத்தைப் பற்றிக் கூறிவிட்டதால், நானும் எனது பல பயணங்களில் ஏதாவதொன்றைக் கூற வேண்டிய நிலையில் உள்ளேன். தற்போது உங்களிடம் எனது ரஷ்யப் பயணத்தைப்பற்றிக் கூறுகிறேன்.

''நண்பர்களே! நமது அரசாங்கத்தார், தங்கள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எங்கள் குடும்பத்தினரை, நான் உள்பட அனைவரையும், தெருச் சுகாதாரத்தைக் கவனித்து வரும்படி ரஷ்யாவுக்கு அனுப்பினார்கள். எங்கள் குடும்பத்தில் மொத்தம் மூன்றே பேர்தான். நான், எனது தந்தை, தாய் ஆகிய மூன்று பேரும் ஒரு நல்ல நாளில் தூத்துக்குடித் துறைமுகத்தில் கப்பலேறி நாளடைவில் ரஷ்யா போய்ச் சேர்ந்தோம். மாஸ்கோவை அடைந்ததும் எங்களை வரவேற்று மாஸ்கோ நகரசுத்தித் தொழிலாளர் சங்கத்தின் ஆதரவில் ஓர் ஊர்வலமும் நடைபெற்றது. நாங்கள் பல தெருக்களைப் பார்வையிட்டுக் கடைசியில் ஸ்டாலின் தெருவை அடைந்ததும் ஒரு வீட்டின்மேலே படர்ந்திருந்த பூசணிக் கொடியினின்றும், அறுந்து கீழே வீழ்ந்தப் பூசணிப் பழம் எனது தாயின் தலையில் வீழ்ந்து, எனது தாயார் அந்த இடத்திலேயே உயிர் நீத்தார். நான் எனது தாயின் மரணத்தையும் பொருட்படுத்தாது அந்தப் பூசணிப் பழத்தை உற்று நோக்கினேன். அந்தப் பழம் நமது ஊர் வாசகசாலைக் கட்டிடம் அளவு மிகப் பெரிதாக இருந்தது. நான் மிகவும் ஆச்சரியப்பட்டு உடைந்த பூசணிப் பழத்தினின்றும் தெரித்த விதைகளில் சிலவற்றைப் பொறுக்கிக் கொண்டேன். பின்பு எனது தாயின் மறைவுத் துக்கத்தை மறக்கும் பொருட்டு, நானும் எனது தந்தையும் அங்குள்ள ஓர் ஏரியில் மீன் பிடிக்கச் சென்றோம். மீன் பிடித்துக்கொண்டிருக்கையில், (அங்குமிங்கும் கீழே பார்த்துக் கொண்டே) ஐயோ..பாம்பு.. கீழே பா..ம்..பு..இ..ங்..கே.. (காலைப் பிடித்துக் கொண்டு)எ..ன்னைக் க..டி..த்து..'' (மயங்கினவரைப்போல் கீழே வீழ்ந்து விடுகிறார்.) கூட்டத்தினர் அவரது நடிப்பைக் கண்டு பலத்த ஆரவாரத்துடன் கை தட்டினார்கள்.

அடுத்தபடியாகத் தலைவர் போட்டியின் முடிவைத் தெரிவித்துப்

பரிசு வழங்க வேண்டும். தலைவர் எழுந்திருந்து, "இது காறும் நீங்கள் கேட்டுக்கொண்டிருந்த இரு சொற்பொழிவுகளில் சிறந்தது எது என்று நமது நடுநிலையாளர்கள் ஏகமனதாக முடிவு தெரிவித்துள்ளார்கள். அதன்படி சொற்பொழிவினூடே தனது நடிப்புத் திறமையையும் சமயோசிதமாகப் பயன் படுத்திய திரு குண்டுப் புளுகர் குருசாமியே வெற்றி பெற்றுள்ளார். திரு குண்டுப் புளுகர் எழுந்து இந்தப் புத்தகத்தையும் புளுகுமணிப் பட்டத்தையும் பெற்றுக்கொள்வார்" என்று கூறி முடித்தார். ஆனால் குண்டுப் புளுகர் எழுந்திருக்கவே இல்லை. அருகில் சென்று அவரை எழுப்பியவர்கள் அவரது உடம்பு 'ஜில்' லென்றிருக்கவே அவரது மூக்கருகில் கை வைத்துப் பார்த்தார்கள். மூச்சு வரவில்லை. சந்தேகத்துடன் விளக்கொளியில் கொண்டுவந்து பார்த்தால், அவரது குதிகாலில் இரு பற்கள் பதிந்த அடையாளம் தெரிந்தது. அதிலிருந்து ரத்தம் கசிந்து வந்துகொண்டிருந்தது. அதே சமயம் அங்கிருந்த ஒருவர், "ஐயோ, பாம்பு" என்று அலறவே கை விளக்கை அடித்துப் பார்த்தால் படத்தை விரித்தபடி நல்ல பாம்பு ஒன்று காணப்பட்டது. பாம்பைக் கண்டவுடன் அனைவருக்கும் விஷயம் விளங்கிவிட்டது. குண்டுப் புளுகர் "பாம்பு, பாம்பு" என்றலறி மயங்கிக் கீழே வீழ்ந்தது அனைவருக்கும் நினைவுக்கு வந்தது. பட்டம் தாங்கிய புளுகுமணி திரு குண்டுப் புளுகு குருசாமியின் கதியை நினைந்து அனைவரும் வருந்தினர்கள்.

எதிர்பாராத பரிசு

சேலம் வேணு

ராமுவும் கிட்டுவும் இணை பிரியாத நண்பர்கள். இருவரும் ஒன்றாகத்தான் பள்ளிக்குச் செல்வார்கள். திரும்பி வரும் பொழுதும் அப்படியே. வகுப்பில், படிப்பிலும் சிறந்து விளங்கினார்கள். இதைக் கண்டு, வகுப்பிலிருந்த சில மாணவர்கள் அவர்கள்மீது பொறாமை கொண்டனர்.

பள்ளி ஆண்டு விழாவை யொட்டி, அவர்கள் பள்ளியில் ஒரு நாடகம் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதில் முக்கிய பாகத்தை ஏற்று நடிக்க ராமுவையும் கிட்டுவையும் அமர்த்தினார்கள். ஒத்திகைகளும் நடந்து வந்தன.

இதைக் கண்ட விஷமக்கார மாணவர்களின் பொறாமை மேலும் அதிகரித்தது. அவர்களுடைய ஒரே நோக்கம் ராமுவையாவது அல்லது கிட்டுவையாவது நாடகத்தில் நடிக்காமல் தடுத்துவிட வேண்டும். அதற்குப் பதிலாகத் தங்கள் கோஷ்டியினின்றும் ஒருவனை நடிக்கச் செய்து அதன் மூலம் முதற் பரிசைத் தட்டிவிடவேண்டும் என்பதுதான்.

ஒரு நாள் உபாத்தியாயர் வகுப்பில் கீழ்க் கண்ட உத்தரவைப் படித்தார்.

“நாடகத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களில் சிலர் ஒத்திகைகளுக்கு ஒழுங்காக வருவதில்லை. நாளை மாலை யாவரும் தவறாமல் ஒத்திகைக்கு வரவேண்டும். அப்படி யாரேனும் வரத் தவறினால் அவர்கள் நாடகத்தில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.”

மறுநாள் காலையிலேயே கிட்டுவுக்குக் கடுமையான ஜுரம். அவனால் எழுந்திருக்கக்கூட முடியவில்லை. அன்று மாலை ஒத்திகைக்குப் போக முடியாமல் போய்விட்டது.

இதை அறிந்த பொறாமைக்கார மாணவர்களின் ஆனந்தத்திற்கு அளவே யில்லை. அவர்களுடைய ஆனந்தத்திற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று கிட்டு நாடகத்தில் நடிக்க முடியாமல் போனது. மற்றொன்று தங்கள் கோஷ்டியிலிருந்து ஒருவன் கிட்டுவுக்குப் பதிலாக நடிக்கப்போகிறான் என்பது.

சில நாட்கள் கழிந்தன. கிட்டுவுக்கும் ஜுரம் குணமாகிவிட்டது. பள்ளிக்குச் சென்ற கிட்டு நேராக உபாத்தியாயரிடம் சென்று தான் நாடகத்தில் நடிக்க முடியாமல் போய்விட்டதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டான்.

உபாத்தியாயர் கிட்டுவைத் தேற்றி, “வருத்தப்படாதே, அடுத்த நாடகத்தில் உன்னைக் கண்டிப்பாகச் சேர்த்துக்கொள்கிறேன். இப்பொழுது உனக்கு ஒரு வேலை கொடுக்கப் போகிறேன். அதாவது ஆண்டு விழா தினத்தன்று இப்பள்ளியை அலங்கரிக்க வேண்டுவது உன் கடமையாகும்” என்றார்.

அன்று முதல் பள்ளியை அலங்கரிப்பதற்காக வேண்டி வர்ணக் காகிதங்களால் தோரணங்களும் மாலைகளும் செய்யத் தொடங்கினான் கிட்டு. இரவு, பகல் பாராமல் வேலையில் முனைந்தான்.

பள்ளி ஆண்டு விழாத் தினமும் வந்தது. அன்று பள்ளிக்கூடம் ஜகஜ்ஜோதியாக விளங்கிற்று. எங்கே கண்டாலும் வர்ணக் காகிதங்களால் செய்யப்பட்ட தோரணங்களும், மாலைகளும் காட்சியளித்தன. பள்ளியின் வாயிலில், ‘நல்வரவு’ என்று நேர்த்தியாக எழுதப்பட்ட பலகையொன்று தொங்கவிடப்பட்டிருந்தது. நாடகம் ஆரம்பம் ஆகும் நேரமும் நெருங்கியது. பொறாமைக்கார மாணவர்கள் எல்லோரும் முன்

வரிசையில் அமர்ந்திருந்தார்கள். கிட்டு ஒரு மூலையில் விசனத்துடன் உட்கார்ந்துகொண்டிருந்தான்.

நாடகம் ஆரம்பம் ஆயிற்று. ராமு தன் பாகத்தைப் பிரமாதமாக நடித்துக்கொண்டிருந்தான். அவன் நடிப்பைக் கண்டு எல்லோரும் சிலையாக நின்றுவிட்டார்கள். ராமுவின் பிரமாதமான நடிப்பைக் காணும் பொழுது கிட்டுவுக்கு, ராமுவோடுதானும்நடிக்க முடியாமல் போய்விட்டதே என்று மிகவும் வருத்தம்தான். ராமுவுடன்கூடப் பொறுமைக்கார மாணவர்களில் ஒருவன் நடித்துக்கொண்டிருந்தான். கிட்டுவுக்கு இந்தச் சமயத்தில் ஒரே ஓர் ஆவல் என்னவென்றால் தன் நண்பன் ராமுவுக்கு முதற் பரிசு கிடைக்க வேண்டும் என்பதுதான்.

நாடகம் முடிந்தது. பரிசு வழங்குவதற்காகத் தலைவர் இரண்டு வெள்ளிக் கோப்பைகளைக் கையில் ஏந்தியவாறே மேடைக்கு வந்தார். கிட்டுவுக்கு ஒரே திகில்! 'முதற் பரிசு யாருக்குக் கிடைக்கப் போகிறதோ! ராமுவுக்குக் கிடைக்குமோ, கிடைக்காதோ!' என்புதுதான்.

பொறுமைக்கார மாணவர்கள் தங்கள் கோஷ்டியின்றும் சென்று நடித்தவனுக்குத்தான் முதற் பரிசு நிச்சயம் என்று எண்ணினார்கள்.

தலைவர் தம் பிரசங்கத்தை ஆரம்பித்தார். "மாணவர்களே, நீங்கள் நடித்த நாடகத்தைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆண்டு விழா இவ்வளவு சிறப்பாக நடைபெற்றதற்குக் காரணம் நீங்கள் நடித்த நாடகமட்டும் அல்ல, இந்தப் பள்ளிக்குச் செய்யப்பட்டிருக்கும் விசேஷ அலங்காரமும் கூட. இந்தப் பணியைச் செய்திருப்பவன் கிட்டு என்னும் மாணவன் என்பதை அறிந்தேன். நாடகத்தில் நடிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காவிடினும், தன் திறமையைக்கொண்டு பள்ளியை அழகுடன் மிளிரச் செய்ய, இரவு பகல் பாராமல் உழைத்தான் என்பதையறிந்து மிக்க சந்தோஷம் அடைகிறேன். ஆகையால் முதற் பரிசாக இந்த வெள்ளிக் கோப்பையைக் கிட்டுவுக்கு அளிக்கிறேன்" என்று சொல்லி, கிட்டுவுக்கு வெள்ளிக் கோப்பையைக் கொடுத்தார்.

கிட்டு தனக்குக் கிடைத்த எதிர்பாராத பரிசைப் பலத்த கைத் தட்டல்களுக்கிடையே பெற்றுக் கொண்டான்.

பிறகு தலைவர், "இந்த நாடகத்தில் மிகவும் சிறப்பாக நடித்த மாணவன் ராமுவுக்கு இரண்டாவது பரிசாக இந்த வெள்ளிக் கோப்பையை அளிக்கிறேன்" என்றார்.

ராமுவும் பலத்த கைத்தட்டல்களுக்கிடையே தன் பரிசைப் பெற்றுக் கொண்டான்.

பாவம்! பொறுமைக்கார மாணவர்கள் தங்கள் கெட்ட எண்ணத்தின் பலனாக, பரிசு பெறாமல் வெட்கத்துடன் திரும்பினார்கள்.

ரப்பர் ஸ்டாம்பு

'மூட்டை'



இந்த ரப்பர் ஸ்டாம்பானது நீங்கள் கடைகளில் வாங்குவது போலிருக்காது. இதை நீங்களே சாதாரணமான ரப்பரில் செய்யலாம். இதற்குத் தேவையான சாமான்கள் முக்கியமாக மூன்று. 1. ரப்பர். நீங்கள் அழிப்பதற்கு உபயோகிக்கும் ரப்பர் போதும். 2. க்ஷவரம் செய்து கொண்ட (Blade) ப்ளேடு 3. ஸ்டாம்பு செய்ய வேண்டிய உருவத்தின் படம். இப்படம் அச்சிட்ட படமாக இருப்பது அவசியம். படத்தின் அளவு உங்களுக்கு வேண்டிய மாதிரியும் கிடைக்கும். ரப்பரின் அளவுக்கு ஏற்றதாயும் இருக்க வேண்டும்.

ரப்பர் ஸ்டாம்பு செய்யும் முறை;-முதலில் எண்ணெயை ரப்பரின் மேல் லேசாகத் தடவு. தடவிய பக்கத்தை அச்சிட்ட படத்தின் மேல் வைத்து அசைக்காமல் அமுக்கினால் படம் ரப்பரில் விழும் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? அம்முறையில் ரப்பரின் மேல் படத்தை எடுத்துக் கொள்ளவும். படத்தில் காட்டியபடி பிளேடை உடைத்து, துண்டாக எடுத்துக்கொண்டு, கூர்மையான முனையால் ரப்பரின் மேலுள்ள, படத்திலுள்ள வெள்ளையான பாகங்களை மிகவும் ஜாக்கிரதையாக ரப்பரிலிருந்து வெட்டி எடுத்து விடுங்கள். கறுப்பான மற்றப் பாகங்கள் ரப்பரிலிருந்து வெட்டுப்பட்டு வந்து விடாமல் பொறுமையுடன் வேலை செய்வது அவசியமாகும். இப்பொழுது உங்களுக்கு வேண்டிய படத்தின் உருவம் ரப்பர் ஸ்டாம் பாகக் கிடைத்திருக்கும். வேண்டுமானால் அந்த ரப்பரை அதற்கேற்ற ஒரு மரக்கட்டையில் வஜ்ரம் கொண்டு ஒட்டி வைத்துக் கொள்ளலாம். இங்கே சில படங்கள் இருக்கின்றன. எங்கே! அவற்றை நீங்கள் செய்யுங்கள் பார்க்கலாம்.

ஷங்கங் இவ்வளவு நேரம் எங்கே இருந்தான்? என்ன செய்துகொண் டிருந்தான்! இப்போது மட்டும் எப்படி அங்கே வந்தான்? அவனும் சாபரும் கட்டுகளை அவிழ்த்துத் தப்பிய பிறகு என்ன செய்தார்கள்?

இதெல்லாம் சீனனுக்குத் தெரியாது.

முதலில் அவர்கள் இருவரையும் யாரோ கட்டிப் போட்டார்கள் என்பதே சீனனுக்குத் தெரியாது. அவன் இவ்வளவு நேரம் டிரைவரோடு செடி மறைவில், வண்டியிலேயே உட்கார்ந்திருந்ததாகவே சீனன் எண்ணிக்கொண் டிருந்தான்.

மாடியிலிருந்து கிங்கிங் தப்பிச் சென்றதை அவன் ஒருகால் வண்டியிலிருந்தவாறு பார்த்திருக்கக்கூடும். அதைப் பார்த்துவிட்டுத்தான், 'பட்சி பறந்தோடி விட்டது' என்று கூறுவதாகச் சீனன் எண்ணினான்.

ஆனால் ஷங்கங் மயிரிழையில் உயிர் தப்பினான் என்பதும் உபயோகமான பல காரியங்களைச் செய்திருக்கிறான் என்பதும் சீனனுக்குத் தெரிய வழி ஏது?

வெகு நேரம் மன்றாடி, கட்டுகளை அவிழ்த்துக்கொண்ட பிறகு, ஷங்கங்கும் சாபரும் வண்டியினுள் போய் உட்கார்ந்தார்கள். அங்கிருந்து பார்த்தால் பாரிஸ்டர் அறையின் வெளிப்புறம் தெரிந்தது. உள்ளே சற்று முன் பரவிய வெளிச்சம் அப்படியே இருந்தது. தங்களைக் கட்டிப் போட்டவர்கள் மேலே போயிருக்கிறார்கள் என்பதில் அவனுக்குச் சந்தேகம் உண்டாகவில்லை. சீனனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தாலும் நேரலாம் என்று தோன்றியபோது அவனுக்கு நடுக்கமாக இருந்தது. அவனுக்குத் துணையாகப் போகலாமா என்று அவன் முடிவு செய்வதற்குள் அந்தப் பழைய கறுப்புக் கம்பளி உருவம், படிக்கட்டில் ஏறி, பங்களாவினுள் தனியாக நுழைவதைப் பார்த்தான். கறுப்புக் கம்பளி கீழே காவலாக நிற்பதாக அவனுக்குத் தோன்றியது. ஆகையால் கீழே இறங்கி, பங்களாவுக்குள் செல்லும் யோசனையை அவன் விட்டுவிட்டான். ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகப் போய்க்கொண் டிருந்தது.

அரை மணி நேரம் வரையில் மேலே என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை.

அவ்வப்போது நடுவே மாடியில் ஏதோ பேச்சுக் குரல்கள் கேட்பது போலிருந்தது. ஆனால் அது பேச்சுக் குரல்தானா, யாருடைய பேச்சுக் குரல் என்று தெளிவுபடுத்திக் கொள்வதற்குள் அதுவும் நின்று விட்டது. அப்பொழுது கிங்கிங், பாரஸ்டரின் மேஜையையும் டிராயர்களையும் பீரோக்களையும் புரட்டித் தள்ளி ஏதோ குடைந்துகொண் டிருந்தான்

என்பதை ஷங்கங் கண்டானு? சீனனும், பார்ஸ்டரின் வேலைக்கார னும் பாரிஸ்டரின் சயன அறையில் சிறைப்பட்டுக் கிடந்தார்கள் என்பதையோ, கறுப்புக் கம்பளி காவல் செய்தான் என்பதையோ, பாவம், அவன் எப்படி அறிவான்?

இனியும் பொறுத்திருந்து, பார்ப்பது பைத்தியக்காரத்தன மாக அவனுக்குத் தோன்றியது.

அவன் ஷாபரைப் பார்த்து, ''சாபர்! வண்டியைச் சத்தப் படாமல் எடுக்க முடியுமா?'' என்று கேட்டான்.

இரவு நேரம். அந்த வீதியே ஓசை அடங்கிக் கிடந்தது. துளிச் சத்தம் கேட்டாலும் அந்த அமைதி யில் வெகு தூரம் கேட்கும் சாபரும் அதைத்தான் கூறினுன்.

''அப்படியானுல் சரி; இரு. நான் கொஞ்சம் வெளியில் போய் விட்டு வந்து விடுகிறேன். நான் வருவதற்குள் இங்கே ஏதாவது விபரீதம் நடந்தால். கொஞ்சம் கூடத் தயங்காதே. அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள். எழுந்து ஓடி வரும்படி சத்தம் போடு. இல்லையோ, பேசாமல் இரு. அதற்குள் நான் தகுந்த ஏற்பாட்டு டன் வருகிறேன். கார் ஹாரனை மட்டும் மூன்று முறை அழுத்து'' என்று சொல்லி விட்டு, ஷங்கங் கால் நடையாகவே வண்டியி லிருந்து இறங்கி வெளியே சென்றுன்.

சென்னை மவுண்ட் ரோடு பிரதேசத்தில் அவனுக்குத் தெரியாத சந்து பொந்துகள் இல்லை. மூலை முடுக்குகளில் உள்ள குப்பைத் தொட்டி, சாக்கடைக் கிணறு, நெருப்பணைக்கும் ஆவிப் பெட்டி, குண்டு குழி எல்லாம் கூட அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அவன் இப்பொழுது போகவேண்டியது டெலிபோன் பெட்டி நிறுத்திய இடத்துக்குத்தான். அது மணிக்கூண்டுக்கு அருகில் இருந்தது. பொது மக்களின் உபயோகத்துக்காக ஏற்பட்டது அது. அங்கே போய், இரண்டணாவைப் போட்டால் யார் எங்கே வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் அவர்கள் டெலிபோன் வைத்திருப்பவர்களாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் எப்படி முடியும்?

அவன் யாரோடு பேச விரும்பினானோ அவர்களுக்கு ஒரு நம்பர் உண்டு. அது பக்கத்தில் இருந்த டெலிபோன் குறிப்புப் புத்தகத்தில் இருக்கும். ஷங்கங்குக்குக் காசு போட்டுப் பேசவேண்டும் என்பது தெரியுமே தவிர, அவர்களுக்கு ஒரு நம்பர் உண்டு என்பது நினைவுக்கு வரவில்லை. இரண்டு மூன்று முறை இரண்டணாவைப் போட்டுத் தடுமாறிய பிறகுதான், அந்தப் பக்கத்திலிருந்து ஒரு பெண் குரல்

கேட்டது.

"யாரோடு தம்பி, பேச வேண்டும்?"

"பறங்கிமலை இன்ஸ்பெக்டரோடு!"

"அவர் நம்பர் தெரியுமா?"

"தெரியாது."

"இரு. நான் லைன் போட்டுக் கொடுக்கிறேன். பேசு!"

இரண்டு மூன்று நிமிஷங்கள் ஷங்கங் ரிஸீவரைக் காதிலேயே வைத்துக் கொண்டு நின்றான். "ஹலோ!" என்று ஒரு தடிக்குரல் அழைத்தது.

"என்ன ஸார்!"

"யாரு பேசறது?"

ஷங்கங் ஒரு கணம் தயங்கினான். பிறகு சட்டென்று சமாளித்துக் கொண்டு, "நான்தான் ஸார், சீனன் பேசறேன்!" என்றான்.

"ஓ! மாஸ்டர் சீனன்! தி மில்லியனர் சீனன்! என்ன மாஸ்டர்! என்ன வேணும் உங்களுக்கு?" என்றார் இன்ஸ்பெக்டர் துரைராஜ்.

"உடனே பாரிஸ்டர் பங்களாவுக்கு வாங்க, ஸார்! தாமதம் செய்தீங்களோ, மோசம் போய் விடும். யாருடைய உயிருக்காவது ஆபத்து ஏற்பட்டாலும் ஏற்பட்டு விடும்" என்றான் ஷங்கங்.

"சரி; இதோ ஒரு சின்ன படையோடு வர்றேன்.."

'கிளிக்'—ஷங்கங் ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டான்.

"ஹலோ, ஹலோ!" என்று டெலிபோனை உலுக்கிய இன்ஸ்பெக்டர், வேறு வழியின்றி, ரிஸீவரைக் கீழே வைக்க வேண்டியதாயிற்று.

ஷங்கங் வண்டிக்கு வருவதும், மாடியிலிருந்து ஓர் உருவம் இறங்கி வருவதும் சரியாக இருந்தன. அந்த உருவம் வாசலைத் தாண்டும் வரையில் ஷங்கங் பொறுத்திருந்தான். அந்த உருவம் விளக்குக் கம்பத்தருகில் போகும்போது கவனிப்பதற்காக, மதில் பக்கமாகப் போய் எட்டிப் பார்த்தான். முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டு அங்கே கிங்கிங்தான் வந்துகொண்டிருந்தான்.

அவனுடைய கண்கள் டாக்ஸியைத் தேடின என்று தெளிவாகத் தெரிந்தது. அப்படி ஒன்றும் அந்த நேரத்தில் வரும் என்று தோன்றாததால் அவன் வேகமாக நடக்கத் தொடங்கினான். கொஞ்ச தூரம் போனதுமே அதிருஷ்டம் அவன் பங்கில் இருப்பது தெரிந்தது. எதிரே ஒரு டாக்ஸி வந்துவிட்டது. அதில் அவசர அவசரமாக ஏறிக் கொண்டான் கிங்கிங். டாக்ஸி வந்த வழியே திரும்பிவிட்டது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஷங்கங் வண்டிக்குத் திரும்பி ஓடிவந்து, "சாபர்! வண்டியை உடனே எடு. நேரே சைனு சு-சூவுக்கு விடு!" என்றான்.

வண்டி புறப்பட்டபோது அதிகமாகச் சத்தம் கேட்கவில்லை. அப்படியே இருந்தாலும் கேட்ட சத்தத்தை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. வண்டி சர்ரென்று திரும்பி, பெரியசாலையில் ஓடியது.

"நேரே ஹோட்டலுக்குப் பக்கத்து மைதானத்தில் நிறுத்து!" என்றான் ஷங்கங், வண்டி உள்ளே நுழைந்ததும்.

அவர்கள் வண்டி மரத்தடியில் போய் நின்ற சமயத்தில்தான், கிங்கிங் ஏறி வந்த டாக்ஸியும் போய் நின்றது. அவனைப் பின்பற்றிச் சென்று, அவன் என்ன செய்கிறான் என்று அறிந்து கொள்வதுதான் ஷங்கங்குக்கு முக்கியமாகப் பட்டது. ஏனெனில் இப்பொழுது விட்டுவிட்டால் காலையில் அவனைப் பிடிக்க முடியாது. இன்று இரவுக்குள் பாரிஸ்டர் வீட்டிற்குப் போய் ஏதோ ஒன்றை முடித்து விடுவதாக அவனும் கம்பளிப் போர்வையும் முடிவு கட்டிக் கொண்டதை அவன் மறக்கவில்லை. பாரிஸ்டர் வீட்டிலிருந்து அவன் திரும்பிவிட்டதால் அந்த முக்கியமான காரியத்தை அவன் முடித்துக் கொண்டு வந்திருப்பான் என்று தோன்றியது. அது என்ன வாசு இருக்கும்? அதைத் தெரிந்து கொள்வது முக்கியமல்லவா? அதனால்தான் ஷங்கங் அவனைப் பின்பற்றி உளவு பார்ப்பது என்று துணிந்து விட்டான்.

அவன் எதிர்பார்த்தபடியே அந்தக் கிங்கிங் நேர் வாசல் வழியாகப் போகவில்லை. ஹோட்ட

வின் பக்கத்துச் சந்து வழியாகப் பின்பக்கம் போனான். மரத்தடியில் நின்ற ஷங்கங் இருட்டோடேயே வந்து பின்பற்றினான். கிங்கிங் திரும்பிப் பார்த்தாலும் பார்க்கலாம் என்று குதிரை விளையாட்டில் முட்டிக்கால் போட்டுக் கொள்வது போல, தரையில் கைகளை ஊன்றிக் கொண்டான். இருட்டில் தப்பித் தவறிப் பார்த்தாலும் நாயோ பூனையோ என்றுதான் எண்ணலாமே தவிர, மனிதன் வருவதாக யாரும் கருதவே முடியாது. சுவர் ஓரமாக ஓர் ஏணி சாத்தியிருந்தது. கிங்கிங் அந்த ஏணியில் ஏறி, ஜன்னலில் ஏறி ஒரு நிமிஷத்தில் மேல் மாடியில் இருந்த தன் அறையின் பின் பாகத்தை அடைந்து விட்டான். முன்னதாகவே அவன் அந்தக் கதவுகளைத் திறந்து வைத்திருந்தான் என்று தெரிந்தது. சீனன் குறிப்பிட்டபடியே, முன் பக்கத்தைப் பூட்டிவிட்டு, அவன் பின் பக்கத்து வழியாக இவ்வளவும் செய்திருந்தான். வெளியிலிருந்து யாராவது பார்த்தால், கிங்கிங் அறையினுள் இருக்கிறான் என்று எண்ண மாட்டார்கள்தானே! அதற்காகவே இந்த யுக்தியைச் செய்திருந்தான் அவன். அப்படி யாராவது வந்தால் கதவு பூட்டப்பட்டிருப்பதைப் பார்த்து, ஆள் வெளியில் போயிருக்கிறான் என்றே திரும்பிவிடுவார்கள். சீனன் சொன்னது சரியாகப் போய்விட்டது என்று அவனுக்குத் தோன்றியது. கிங்கிங் மேலே ஏறியதும், முதல் காரியமாக, சுவரில் சாத்தியிருந்த ஏணியை மேலிருந்தவாறே தூக்கினான், அடுத்த நிமிஷம் ஏணியைச் சட்டம் சட்டமாகப் பிரித்து அடுக்கி, ஒரு கட்டாகக் கட்டி, சந்தில் போட்டு விட்டான். யாராவது பார்த்தால் ஏதோ சட்டங்கள் என்றுதானே நினைப்பார்கள்?

ஷங்கங்குக்கு இது பெரிய ஏமாற்றமாகப் போயிற்று. அவன் எப்படி மேலே ஏறமுடியும்? இருந்தாலும் அவன் தைரியத்தையோ முயற்சியையோ கைவிடவில்லை. அவன் பொறுமையோடு அந்தச் சட்டங்களை எடுத்து, ஏணி போல் பொருத்த முயன்றான். அது அத்தனை எளிதாக இல்லை. இருட்டில் எது எதற்குரிய சட்டம் என்று புரியவில்லை. எனவே அதைக் கைவிட்டுவிட்டு வேறு வழி ஏதாவது இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தான். ஆம்; இருந்தது. அதைப் பார்த்தபிறகு தான் அவன் முகம் மலர்ச்சியடைந்தது. மதில் சுவரின்மேல் ஏறி விட்டால், அடுத்த அறையின் ஜன்னல் அவனுக்கு எட்டும். அதைப் பிடித்துக்கொண்டால் அப்புறம் மேலே ஏறுவதோ, உள்ளே குதிப்பதோ என்ன பிரமாதம்?

எல்லாம் முதலில் சுலபமாக இருக்கும்போலத்தான் இருந்தது. ஜன்னலைப் பற்றியபோது அந்த அடுத்த அறையில் யாராவது இருந்திருந்தால் அவன் தப்பியே இருக்க முடியாது. திருடன் என்று அகப்பட்டுக்கொண்டிருப்பான். அங்கிருந்து கட்டைச் சுவரைப் பற்றிக்கொண்டு நடந்த போது கால் வழுக்கிவிட்டிருந்தால் ஆளே பைசலாகியிருப்பான். அதையும் எப்படியோ சமாளித்துவிட்டான். எல்லாவற்றுக்கும் மேலாகத் தைரியம்தான் காரணம். எப்படியாவது நினைத்த காரியத்தைச் சாதிக்கவேண்டும் என்ற மனோதிடம் இல்லாமல் இருந்திருந்தால் ஒன்றுமே நடந்திருக்காது.

கடைசியாக அந்தக் காரியத்தை அவன் சாதித்தேவிட்டான். மூச்சைப் பிடித்துக்கொண்டு அவன் கிங்கிங் அறையின் பின்பக்கம் போய்க் குதித்துவிட்டான். உள்ளே இருந்த கிங்கிங் தன்னுடைய சாமான்களை எடுத்து வைப்பதில் முனைந்திருந்தான்.

ஷங்கங் வராந்தாவில் கிடந்த ஒரு பீரோவின் மறைவில் பத்திரமாக நின்றுகொண்டு கிங்கிங் எடுத்துவைத்த ஒவ்வொரு பொருளையும் பார்த்துக்கொண்டு நின்றான். பாரிஸ்டர் வீட்டிலிருந்து என்ன கொண்டுவந்தான் என்பது புரியவில்லை. ஆனால் நீல நிறமாக இருந்த ஒரு பெரிய பிளான் போன்ற படம் பாரிஸ்டரின் மேஜைமேல் இருந்ததை அவன் பார்த்திருந்தான். அது இப்போது

இவனுடைய பெட்டிக்குள் அடக்கம் செய்யப்பட்டிருந்தது, பிறகு அந்தத் தோல்பெட்டி, சீனனிடம் இருந்த சு-சூ பெட்டி! அதையும் அவன் பெட்டிக்குள் வைத்தான்.

எல்லாவற்றையும் வைத்துப் பூட்டிய பிறகு, கிங்கிங் பின்புறமாகவே வந்து எட்டிப் பார்த்தான். பிறகு உள்புறம் போய் கொக்கியைத் தள்ளிக் கதவைத் திறந்தான். என்ன ஆச்சரியம்! வெளிப் பக்கம் பூட்டப்பட்டிருந்ததுபோல் இருந்த கதவு, பூட்டோடு திறந்து கொண்டு விட்டது.

அவன் வெளியில் புறப்படப் போவதை அறிந்து ஷங்கங் சட்டென்று கட்டைப்பிடிச் சுவரை அடைந்தான். ஆனால் என்ன துரதிருஷ்டம்! கிங்கிங் கண்களில் அவனுடைய வெள்ளை ஆடை தென்பட்டு விட்டது.

அடுத்த கணம் 'டுமீல்' என்று துப்பாக்கியை வெடித்தான் கிங்கிங். அது வெடித்ததும் ஷங்கங் சந்தினுள் தொப்பென்று விழுந்ததும் ஏககாலத்தில் ஒலித்தன. துப்பாக்கியால் சுட்டுத் தள்ளி விட்டோம் என்ற திருப்தியுடனேயே கிங்கிங் போயிருக்க வேண்டும். அப்புறம் கிங்கிங் டாக்ஸியில் ஏறிச் சென்றதைத் தான் அவன் வாசலுக்கு வந்த போது பார்த்தான். வாட்சுமேன் இன்னும் விழித்துக் கொண்டிருப்பதாகத் தோன்றியதால் ஷங்கங் அங்கேயே நின்றான். கால்மணி நேரம் ஆனதும் வாட்சுமேன் மீண்டும் உறக்கத்தில் ஆழ்ந்தான். ஷங்கங் சுவரோடு சுவராக ஒண்டிக் கொண்டு, தன்னுடைய கார் நின்ற இடத்துக்கு வர முயன்றான்.

ஆனால் அங்கே ஓர் உருவம் குனிந்து எதையோ தேடிக் கொண்டிருந்தது. ஷங்கங் உற்றுக் கவனித்தான். கறுப்புக் கம்பளி போர்த்த உருவம்தான் அது. அந்த உருவம் மெல்லப் படிக்கட்டில் ஏறி உள்பக்கமாக வந்தது. ஷங்கங்கும் பின் தொடர்ந்தான். அந்த உருவம் யார் என்று தெரிந்துகொண்டுவிட அவன் விரும்பினான். தன் தைரியம் அனைத்தையும் ஒன்று சேர்த்துக் கொண்டான். அங்கே இருந்த பீரோ மறைவில் போய் ஒளிந்து கொண்டான்.

கறுப்புக் கம்பளி மரம் இருந்த பக்கமாக உள்ள வராந்தாவில் எதையோ தேடியது. கைக்கு எட்டும் தூரம்தான், ஷங்கங் துணிந்து விட்டான். அடுத்த கணம் கம்பளியைப் பிடித்து, ஒரு வெட்டாக வெட்டி இழுத்து விட்டான்.

"ஹோ!" என்ற சத்தம் எழுந்தது. ஷங்கங் பயத்தில் கண்ணை மூடிக் கொண்டுவிட்டான்.

(தொடரும்)

ஆசாரிக்குக் கோபம் வந்தால்....!!



கரும்பும் குறும்பும்

அழ. வள்ளியப்பா

குறும்புக் காரக் குப்பன்—அவன்
கரும்புக் கடைக்குள் நுழைந்தான்
கரும்பில் ஒன்றை எடுத்தான்—அதைக்
கையில் வைத்து நின்றான்.
காசை எடுத்து உடனே—அந்தக்
கடையில் கொடுக்க வில்லை.
ஆசைக் காரக் குப்பன்—அவன்
அங்கு மிங்கும் பார்த்தான்.
இங்கும் அங்கும் பார்த்தான்—மெல்ல
ஏய்த்து ஓட நினைத்தான்,
பொங்கல் கூட்டம் தனிலே—பையப்
புகுந்து செல்ல முயன்றான்.
இரண்டு அடிகள் கூட—அவன்
எடுத்து வைக்க வில்லை.
கரும்பின் நுனியைப் பிடித்தே—ஒரு
காளை இழுக்கக் கண்டான்!
அந்தப் பக்கம் கரும்பை—குப்பன்
ஆத்தி ரத்தில் இழுக்க
இந்தப் பக்கம் நுனியைக்—காளை
இழுத்துப் பிடித்துக் கடிக்க,
கரும்பு விற்கும் மனிதர்—உடன்
கண்டு விட்டார் திருட்டை!
இரும்புக் கையால் குப்பன்—கன்னம்
இரண்டும் வீங்கச் செய்தார்!

எழுத்தாளர் ஏமாற்றம்

நிலவரசு

எழுத்தாளர் திரு ஏமாற்றம் கதைகளையும் கட்டுரைகளையும் எழுதித் தள்ளிக்கொண்டே இருந்தார். அவருடைய கதைகளும் கட்டுரைகளும் பார்வையிடாத பத்திரிகாலயமே இல்லை என்று சொல்லலாம். ஆனால் அனுப்பிய எல்லாக் கதைகளும் கட்டுரைகளும் திரும்பி வந்துகொண்டேயிருந்தன. திரு ஏமாற்றத்திற்குப் பெரிய ஏமாற்றமாகவே இருந்தது இது.

திருப்பி அனுப்பப்பட்டவைகளுடன் இணைக்கப்பட்டிருந்த துண்டுச் சீட்டுகளைப் பார்த்த பிறகு, அவருக்குக் கோபம் கோபமாக வந்தது.

'வந்தனம். தங்கள் கதை, கட்டுரைகளைப் பிரசுரிக்க இயலாததற்கு மன்னிக்கவும்.'

'தங்கள் கதை, கட்டுரைகளை வெளியிட எங்கள் பத்திரிகையில் இடமில்லை என்று வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்.'

'தங்கள் கதை - கட்டுரைகள் எங்கள் பத்திரிகைக்கு ஏற்றதாக இல்லை. திருப்பி அனுப்புவதற்கு வருந்துகிறோம்.'

இவைகளையே திரும்பத் திரும்பப் படித்த ஏமாற்றத்திற்கு, ஏமாற்றத்தோடு எல்லையில்லாக் கோபமும் ஆத்திரமும் வந்தன. வீட்டிலே எங்குப் பார்த்தாலும் எழுதி எழுதி அடுக்கி வைக்கப்பட்ட காகிதக் கட்டுகள் நிறைந்திருந்தன.

அன்றுதான், அவருடைய அன்னைக்குக் காகிதப் பிரச்னை ஏற்பட்டது. ''இந்தப் பழைய காகிதங்களை எல்லாம் நிறுத்தால் இருபது வீசை இருக்கும். ஒரு வீசை ஒன்றே கால் ரூபாய் என்றால் மொத்தம் இருபத்தைந்து ரூபாய் கிடைக்கும். வீட்டுச் செலவிற்காவது உதவும்'' என்றாள் அன்னை.

எழுத்தாளர் ஏமாற்றம், ''சரி, அம்மா! எல்லாவற்றையும் எடுத்து வை. இன்று அவற்றை விற்றுவிடலாம்'' என்றார் ஆத்திரத்துடன்.

சலிப்படைந்த மனத்தோடு கடை வீதிப் பக்கமாக அவர் சென்றார். வழியில் எதிரே குறுக்கிட்ட தபால்காரர் ஒரு கவரை அவரிடம் கொடுத்தார். அதில்:—

''ஏமாற்றம் என்ற தங்கள் கதை மிகவும் அருமையாக அமைந்திருக்கிறது. அதற்குப் பரிசாக இப்போது நூறு ரூபாய் செக் மூலம் அனுப்பியிருக்கிறோம். வேறு கதைகள் அனுப்ப வேண்டுகிறேன்.

ஆசிரியர்,
'மனமாற்றம்.'''

இதைப் படித்தவுடன் ஏமாற்றத்திற்கு மனமாற்றம் ஏற்பட்டுவிட்டது. செக்கை எடுத்துப் பத்திரமாகத் தன் சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டார். வீட்டை நோக்கி மிக வேகமாகச் சென்றார். இனி தம் புனை பெயர் 'ஏமாற்றம்' என்பதை 'வெற்றி' என்று மாற்றிக்கொண்டுவிட வேண்டும் என்ற தீர்மானத்துடன் வீட்டு வாசற்படி ஏறினார்.

வீடு அமைதியாக இருந்தது. தாழ்வாரத்தையும் அலமாரி மேஜைகளையும் பார்த்த எழுத்தாளர் ஏமாற்றம் பதறிப் போனார்.

''என்ன அம்மா, என் கதைகள் எல்லாம் என்ன ஆச்சு?''

''இதோ பார்! இதுதான் ஆச்சு!'' என்று அம்மா கையிலிருந்த பணத்தைக் காட்டினாள்.

''இந்தக் காகிதங்களில் ஒரு வீசைக்குக் குறைந்தது ஐம்பது கதைகள் எழுதியிருந்தால், இருபது வீசைக்கு ஆயிரம் கதைகளாகின்றன. ஒரு கதைக்கு ரூபாய் பத்து கிடைத்தால், மொத்தம் பத்தாயிரம் ரூபாய் கிடைக்கும். அத்தனையும் போச்சு! அரை மணி போய்விட்டு வருவதற்குள் எந்தப் பழைய பேப்பர்காரன் எமன் மாதிரி வந்தான்?'' என்ற ஏமாற்றம் தலை தெறிக்க வாசலில் ஓட்டமாய் ஓடினார்.

ஆனால் என்ன ஏமாற்றம்! பழைய பேப்பர்காரன் போன இடமே தெரியவில்லை! ஏமாற்றம் சோர்ந்து போய் வீடு திரும்பினார்.

தந்தி

தந்தி தந்தி என்றதும்
தொந்தி கூடக் கலங்குது!
வந்த சேதி என்னவோ?
என்று மனமும் பதறுது.

ஊரில் உள்ள உறவினர்
உடல் நலம் குறைந்ததோ?
வேறு துக்கச் செய்தியோ?
விபத்து நடந்து விட்டதோ?

பள்ளி நண்பர் தேர்விலே
பாஸ் செய்த செய்தியோ?
அள்ளிக் கொடுக்கும் லாட்டரியில்
அதிர்ஷ்டம் அடித்து விட்டதோ?

இன்பச் செய்தி வந்திடில்
இதயம் பொங்கி மகிழுது.
துன்பச் செய்தி கண்டிடில்
துயரம் மனத்தை வாட்டுது.

சு. முருகேசன்

நீங்களும் நானும்

[இந்தப் பகுதியில் உங்களுக்குத் தோன்றும் சந்தேகங்களையெல்லாம் கேட்கலாம். எனக்குத் தோன்றியவைகளைச் சொல்கிறேன். பிறரைப் புண்படுத்தாத முறையிலும், கூடுமானவரையில் உங்களுக்குப் பயன் படக்கூடிய கேள்விகளாகவும் கேளுங்கள். —ஆர்வி.]

சோ: சாமிநாதன், மதுரை

கே: உயிர்நூலறிஞர்கள் மனிதனை ஒரு மிருகம் என்கிறார்களே, சரிதானா?

ப: சரிதான்; உயிர்வாழ்க்கை அறிஞர்கள் மனிதனை வெறும் மிருகமாகக்கூட நினைப்பதில்லை. முரட்டு மிருகம் என்று கருதுகிறார்கள்.

ஆர். பட்டு, தஞ்சை

கே: யானைகளின் வயசு என்ன?

ப: 60 முதல் 65.

டி. முத்துராமன், சென்னை–17,

கே: பணப்பெருக்கம் என்கிறார்களே, அப்படி என்றால் என்ன?

ப: தேவைப் பண்டங்கள் குறைந்து, பணத்தின் மதிப்பு குறைந்து விடுகிறது. பணத்தின் மதிப்பு குறைந்து செலாவணி மட்டும் அதிகமாய் இருக்கிறது என்று அர்த்தம்.

ஸபியா, கோவை

கே: இந்தியாவில் முதல் முதல் கிரிக்கெட் ஆடத் தொடங்கியது எப்போது?

ப: அது சரியாகத் தெரியாது. 1751-க்கு முன்பே இந்தியாவில் கிரிக்கெட் ஆட்டம் இருந்ததாகச் சொல்கிறார்கள். ஆனால் முதல் இந்தியக் கிரிக்கெட் கிளப் 188-இல்தான் தோன்றியது.

அ. மு: சாமி, பேராவூரணி

கே: இந்தியாவில் எத்தனை பாஷைகளில் திரைப்படம் வந்திருக்கிறது?

ப: பதின்மூன்று பாஷைகளில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, உருது, மராட்டி, குஜராத்தி, வங்காளி, ஸிந்தி, இங்கிலீஷ், புஷ்டு முதலியவற்றில்.

ந: சின்னதம்பி, செங்கோடு

கே: இந்தியாவின் முடிசூடா மன்னர் யார்?

ப: இப்போது ஜவாஹர்லால் நேரு.

கே; கனவுக்கும் கற்பனைக்கும் என்ன வித்தியாசம்?

ப: கனவு பொதுவாகத் தூக்கத்தில் தோன்றும் கற்பனை: கற்பனை விழித்துக்கொண்டே காணும் கனவு.

எஸ். ராஜகோபாலன், திருவையாறு

கே: செல்வம், சக்தி, இயற்கை வளம், எல்லாம் கொழிக்கும் சொர்க்க பூமி போன்ற நாடு உலகத்தில் எது?

ப: அமெரிக்கா. ஆனால் சொர்க்கத்தில் ஒழுக்கம் உண்டோ, இல்லையோ, அமெரிக்காவில் நிச்சயம் இருப்பதாகத் தெரியவில்லை.

கே. எஸ். திருநாவுக்கரசு, கும்பகோணம்.

கே. சாவு என்பது எதற்காக?

ப: கிழங்கள், பழமைகள், உபயோகமில்லாதவைகள் செத்துப் போவதற்காக.

பங்கஜம், திருச்சி

கே: வீடு என்பது என்ன?

ப: வீடு என்பது இல்லறக் கோயில்; கணவன்தான் சாமி;

மனைவி அம்மன். குழந்தைகள் குட்டிச் சாமிகள்.

வி. பி. தேசாய், உதகை

கே: 'பிக்பாக்கெட்' கூட ஒரு கலைதான் என்று என் நண்பன் சொல்லுகிறான். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

ப: நானும் அதைத்தான் சொல்கிறேன்; அகப்பட்டுக்கொள்ளாத வரையில். அகப்பட்டுக்கொண்டால் 'கொலை'.

எம். கிருஷ்ணன், பம்பாய்-19

கே: நோயாளிகளுக்கு ரத்ததானம் செய்யுங்கள் என்று விளம்பரம் செய்திருக்கிறார்களே! நீங்கள் கொடுத்திருக்கிறீர்களா?

ப: இல்லை; விளம்பரம் செய்பவர்களிடம் அதிக ரத்தம் இருப்பதாக என் எண்ணம்.

பா. வீராசாமி, ஆம்பூர்

கே: நீங்கள் அடிக்கடி எதையாவது மறந்துவிடுவதுண்டா?

ப: உண்டு; என் முகத்தை, அதற்காகத்தான் தினம் கண்ணாடி பார்க்கிறேன்,

கே. சுலோசனா, புனா

கே: ஆணும் பெண்ணும் சேர்ந்து படிப்பது அபாயமா, அருவருப்பா?

ப: குறிப்பிட்ட வயது வரையில் சேர்ந்து படிப்பதால் அபாயமும் இல்லை; அருவருப்பும் இல்லை. பிறகு ஆணும் பெண்ணும் சேர்ந்து படிப்பது அவசியமில்லை. ஏனெனில் இருவருக்கும் வேண்டிய படிப்பு வேறு வேறு.

சுந்தரேசன், கும்பகோணம்

கே: ஐ. நா. ஸ்தாபனம் எதற்காக ஏற்பட்டது?

ப: அதன் நோக்கங்கள் முக்கியமாக மூன்று. (1) சர்வதேச சமாதானத்தைப் பாதுகாப்பது. (2) மனித சுதந்தரத்தைப் பாதுகாத்து வளர்ப்பது. (3) மனிதகுலத்தின் நலனை வளர்ப்பது.

முஸ்தாபா கமால், அரவாக்குறிச்சி

கே: ஐ. நா. பந்தோபஸ்து சபையில் இந்திய பிரதிநிதியின் தலைவர் யார்?

ப: வி. கே. கிருஷ்ணமேனன்.

ஆர். மைதிலி, சென்னை–1.

கே: இந்தியாவில் எது மிக அதிகம்? எது மிகக் குறைவு?

ப: ஜனத்தொகை; வருமானம்.

பா. சொக்கலிங்கம், நெல்லை

கே: சட்டசபைத் தேர்தலுக்கு நிற்பீர்களா?

ப: மாட்டேன்: உட்கார்ந்து கொண்டே கும்பலோடு கும்பலாக வெறுமே கையைத் தூக்க என்னால் முடியாது.

எஸ். எஸ். செளந்தரவல்லி, ஸ்ரீரங்கம்.

கே: பயம் இல்லாத மனிதன் உண்டா?

ப: இல்லை. ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு விதமான பயம் இருக்கத்தான் இருக்கும்.

பாலமுருகேசன், சென்னிமலை

கே: ஹாஸ்யமாக எழுதுவது கஷ்டமா?

ப: யார் சொன்னது அப்படி? எழுதுவதில் என்ன கஷ்டம்? பேனாவை எடுத்து வைத்துக் கொண்டு, மனத்தில் தோன்றியதைக் காகிதத்தில் எழுதுவதில் ஒன்றும் கஷ்டமில்லை. ஆனால் சிரிப்பு வரும்படி விஷயம் தோன்ற வேண்டுமே, அதுதான் கஷ்டம்.

மு. முத்துகிருட்டினன், புதுவை.

கே: புராணப் படம், சரித்திரப் படம். சமூகப் படம் இவற்றில் நீங்கள் விரும்பிப் பார்ப்பது எதை?

ப: மூன்றும் அவியல் செய்த படங்களைக்கூட நான் பார்த்திருக்கிறேன். ஆனால் விரும்பியதில்லை. எது நல்ல படமோ, அது எனக்கும் பிடித்திருக்கிறது.

ஷேக் அல்லாவுதீன், ஐயம்பேட்டை

கே: எனக்கு எந்தப் பையன் மீதாவது கோபம் வந்தால் அவனை அடித்தாலொழிய அது அடங்குவதில்லை. கோபம் வராமல் இருக்க என்ன வழி?

ப: உன்னைவிட பலசாலியான பையனிடம் அடுத்த தடவை கோபப்படு. அவன் அதற்கு ஒரு வழி செய்துவிடுவான்.

எஸ். சாந்தகுமாரி, ஈரோடு

கே: எந்தப் படத்திலுமே கதாநாயகர்கள் செத்துப் போவதில்லையே, ஏன்?

ப: செத்துப் போகிறவர்களைப் பார்க்க யாரும் காசு கொடுத்து வரமாட்டார்கள். அததனுல்தான்.

கே. சுலோசனு, மதுரை

கே: நான் குட்டையாக இருக்கிறேன். ஆனுல் உயரத்துக்குத் தகுந்த பருமனுகவும் இருக்கிறேன். ஆயினும் எனக்கு உயரமாக வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. என் ஆசை நிறைவேற ஒரு வழி சொல்லுங்கள்.

ப: பெண் வளர்ச்சி பின்னுல் தெரியும். அதற்குள் உள்ளத்தில் உயர்ந்துவிடு.

ராஜசேகரன், பங்களூர்-3.

கே: அதிகமாகச் சாப்பிடுவது நல்லதா, கெடுதலா?

ப: சிறுவர்களைப் பொறுத்த வரையில் எவ்வளவு சாப்பிட்டாலும் அதிகம் என்று சொல்வதற்கில்லை. தித்திப்பு மட்டும் மிக அதிகமாகாமல் இருப்பது நல்லது.

ஆ. ரா. செங்கல்வராயன், நண்பர்கள், வண்ணையம்பதி

கே; மனிதன் எப்பொழுது அறிவை இழக்கிறுன்!

ப: வயிற்றிலோ, நெஞ்சிலோ ஒன்றும் இல்லாதபோது.

சம்பத், சைதாப்பேட்டை

கே: என் விகடத் துணுக்குகளை நீங்கள் ஏன் பிரசுரிப்பதில்லை?

ப: ஆமாம்; அதைப் படித்தால் ஏன் சிரிப்பு வருவதில்லை?

அண்ணு, தெக்கூர்

கே: தங்களுக்கு எந்த அரசியல் கட்சியிடத்தில் பற்று அதிகம்?

ப: ஒரு கட்சி இருந்தது; அது ஓரளவில் இப்பொழுதும் இருக்கிறது; ஆனுல் எனக்குத்தான் பற்று இல்லை.

ஆனந்தரங்கன், வேலூர் (வ. ஆ)

கே: ஒன்றுக்கும் உதவாதவன் யார்?

ப: தானும் செய்யமாட்டான்; பிறரையும் உருப்படியாக ஒன்றும் செய்யவிடமாட்டான். அவன்தான்.

பாபுச்சி, ரங்கநாதபுரம்:

கே: உங்களுடைய மூளையின் நிறை எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

ப: முடியும். சுமார் மூன்று பவுண்டு; ஆனுல் சிலருக்கு இது அதிகக் கனமாக இருக்கும்; அதாவது களி மண் கனமாகத்தானே இருக்கும்?

தங்கவேலு, தாம்பரம் மேற்கு

கே: ஆங்கிலத்தைத் தள்ளிவிட்டு, ஹிந்தியே போதும் என்கிறுர்களே, உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப; ஆங்கிலத்தில் நாம் தேர்ச்சி பெற்றதனுல்தான் சுதந்தரக் கனல் மூண்டது; நம் குரலைப் பிறர் கேட்க முடிந்தது. ஹிந்தி பேசுபவர்களுக்கு ஆங்கிலம் நம்மைப்போல வருவதில்லை. அதனுல்தான் வேண்டாம் என்கிறுர்கள்.

ஏ. கமாலியா, அழகர்நாயக்கன்பட்டி

கே: நம் நாட்டு விவசாய முறைக்கும், அயல் நாட்டு விவசாய முறைக்கும் வித்தியாசம் என்ன?

ப: 'அகல உழுவதைவிட ஆழ உழு' என்பது நம்முடைய பழமொழி. ஆனுல் இது பழமொழிதான். புதுமொழி வேருகிவிட்டது.

கோபிநாதன், ஆம்பூர்

கே: நீங்களும் நானும் எந்தச் சமயத்தில் தலைகுனிய வேண்டியிருக்கிறது?

ப: கதையைத் திருப்பித் தரும் போதும், கை நீட்டி வாங்கிக் கொள்ளும் போதும்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

பரிசுக்குரிய புத்தகங்கள்

கண்ணன்

குழந்தைகளுக்கு நண்பர்கள், உறவினர்கள் தரக்கூடிய சிறந்த பரிசு கண்ணன் வெளியீடுகள். இவற்றைப் பொங்கல் சமயத்தில் பரிசுப் பாக்கெட்டுகளாகக் குறைந்த விலையில் கொடுத்து வந்தோம். இந்த வருஷம் வேண்டிய புத்தகங்களை மட்டும் வாங்கிக்கொள்ளலாம். கண்ணன் வெளியீடுகளில் சில இப்போது கைவசம் இல்லை. சிலர் முன்பு பரிசுப் பாக்கெட்டுகளாகவும் வாங்கியிருப்பார்கள். அதற்காகவே இந்த மாறுதல்.

			ரூ.	அ.
1.	வீடர் மணி - ஆர்வி	..	1	8
2.	சந்திரகிரிக் கோட்டை - ஜனு	..	1	4
3.	அசட்டுப் பிச்சு - ஆர்வி	..	1	0
4.	அபாயச் சங்கு - நீலம்	..	0	8
5.	விளையும் பயிர் - கி. வா. ஜ.	..	0	8
6.	ஜக்கு - ஆர்வி	..	0	8
7.	ஜம்பு - ஆர்வி	..	0	8
8.	விஞ்ஞானம் பேசுகிறுர் - பெ. நா. அ.	..	0	8
9.	மின்னல் அரக்கன் - ஜனு	..	0	8
10.	ஏரிக்கரை மாளிகை - ஜனு	..	0	8
11.	கழுகும் கிளியும் - 'சோமசன்மா'	..	0	8
12.	தவளையும் காளையும் - 'சோமசன்மா'	..	0	8
13.	பாரஸீக ரோஜா - சித்திரக் கதை	..	0	5
14.	குளிகைத் தீவு - சித்திரக் கதை	..	0	4
15.	மாஸ்டர் பாலகுமார் - சித்திரக் கதை	...	0	4
16.	தூங்கும் அழகி - சித்திரக் கதை	..	0	4
17.	நீச்சல் பழக்கம் - பயிற்சி	..	0	3
18.	கோழி விதைத்த நெல் - பாட்டுக் கதை	...	0	3
19.	பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும்	..	0	3
20.	என் பேர் என்ன?	..	0	3

ரூ. 5/-க்கு மேல் ஒரே சமயத்தில் வாங்குபவர்களுக்கு 20% கமிஷன் உண்டு. கிண்டியிலுள்ள சர்வகலாசாலை நூற்றுண்டு விழா கண்காட்சி 171 - 172 ஸ்டால்களிலும் கிடைக்கும். தபால் செலவு தனி. வி. பி. பி. கிடையாது. (இலங்கை தவிர).

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை -4.

(Regd, as Newspaper in Ceylon.) **Reg. No. M. 554**

கலைமகள்
பொருள் விளக்கப் படங்கள்

மண் எண்ணெயின் கதை, ஆற்றின் கதை, தீப பெட்டியின் கதை, கடிதத்தின் கதை, பட்டின் கதை, பென்ஸிலின் கதை முதலிய விஷயங்களைப் படங்கள் மூலம் விளக்கும் சுவர்ப் படங்கள். 20"×30" பரப்புள்ள தாளில் கொட்டை எழுத்துக்களில் கண்ணைக் கவரும் இரு வர்ணங்களில் தயாரிக்கப்பட்டவை. நீண்டகாலம் இருக்கவேண்டுமெனும் நோக்குடன் சிறந்த காகிதத்தில் 'போட்டோ லித்தோ' முறையில் தயாரிக்கப் பெற்றவை.

சிறந்த பொது அறிவைப் போதிக்கும் இந்தப் படங்கள் ஆரம்பப் பள்ளி, ஆரம்ப உயர்தரப் பள்ளி, நடுத்தரப் பள்ளி, போதனுமுறைப் பள்ளி முதலியவைகளுக்கு மிகவும் உபயோகமானவை. வீட்டிலேயே குழந்தைகளுக்குப் போதிக்கவும், முதியோர் கல்விக்கும் அவசியமானவை.

ஆறு படங்கள் அடங்கிய செட் ரூ. 4/-

(போதனுமுறை விளக்கம் இலவசம்.)

தபால் செலவு தனி.

பாடப் படங்கள்

கண்ணைக் கவரும் 4 வர்ணப் படங்கள் மூலம் தமிழ் வார்த்தைகளையும் எழுத்துக்களையும் விளையாட்டாக வீட்டில் குழந்தைகள் தெரிந்துகொள்ளலாம். 45 படங்கள், வார்த்தைகள், எழுத்துக்கள், பயிற்சி முறை அடங்கியது ஒரு செட்.

புதிய பாடத் திட்டப்படி சிறந்த அறிஞர்களால் தயாரிக்கப்பெற்றது.

ஆரம்ப, [illegible]தனுமுறைப் பள்ளிகள், முதியோர் கல்விச்சாலைக[illegible] [illegible]கியவைகளுக்கு மி[illegible]வும் இன்றியமையாதவை.

விலை ரு. 1/8

கலைமகள் காரியாலயம், செ[illegible]னை-4